789

789 / 331 / 443

கதர் மலர்



மலர் 4 இதழ் 12

தமிழ் நாட்டு சர்க்கா சங்கம், கைக் காகிதத்தில் வெளியிடும் மாதப் பத்திரிகை.



— ராஜ்கோட் காந்தி சித்திராலய அனுமதியுடன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 SEP 1951
MADRAS

செப்டம்பர்

1951

★

வருஷச் சந்தா ரூ. 3

★

விலை அணா 4

ஸர்வோதய பிரசுராலயம், (A. I. S. A.) வீரபாண்டி, திருப்பூர்.

பொருளடக்கம்.

கம்யூனிஸ்டுகள் விரும்புவதையே நான் செய்கிறேன் – ஆச்சாரிய வினோபாஜி 381
கல்வி உலகில் புத்துணர்ச்சி ,, 384
ஜன நாயகத்தின் அடிப்படை– ஜே. ஸி. குமரப்பா 389
ராம நாமம் – ஆச்சாரிய வினோபாஜி 394
உடல் உழைப்பு – காகா கலேல்கர் 396
ஊழியர்களிடையே வினோபாஜி 397
வாலிபர்களுக்கு அழைப்பு– திரேந்திர மஜூம்தார் 399
கீதைப் பேருரைகள்– ஆச்சாரிய வினோபாஜி 402
வினோபாஜி யாத்திரை– என். எஸ். ஸ்வாமிநாதன் 404
தமிழ்நாட்டு விபாகங்கள் 408
அமெரிக்கா செல்லும் ஸ்ரீ. அருணாசலம்–தி. சுப்பிரமணியம் 412
அக்டோபர் 2-உ 413
அட்டவணை 414
அஹிம்சையின் சின்னம் ராட்டை
சர்க்கா ஜயந்தி
நான்காம் ஆண்டு பூர்த்தி

கதர் மலரின் நான்காம் ஆண்டு பூர்த்தி.

இந்த இதழுடன் கதர் மலரின் நான்காம் ஆண்டு பூர்த்தியாகின்றது.

கிராம மக்களுக்காக, கிராமவாசிகளினால், கிராம ஆட்சியை ஏற்படுத்துவது நமது லட்சியம். இதற்காக காந்திய-ஸர்வோதய வழியில் புரட்சியை நீடித்து நடத்த சிந்தனை, உணர்ச்சி, செயலைத் தூண்டுவதே எமது பணி.

இன்றைய பிரசினைகள் தெளிவாகிவிட்டன. 1. யந்திரம் மனிதனின் நன்மைக்காகவா, அல்லது அவனை அடிமைப்படுத்தி அழிக்கவா? 2. மனித மதிப்பா, பண மதிப்பா? 3. ஜன சேவையா, ஜனங்களை அடக்கி ஆளும் அதிகாரமா? 4. நாட்டை ஆளுவது, பதினைந்து சத வீத நகரவாசிகளா, அல்லது 85 சத வீத கிராமவாசிகளா? 5. ஓட்டுமூலம் ஜனநாயகமா, பொருளாதார ஜனநாயகமா? 6. கல்வி சுரண்டுவதற்காகவா, மக்களின் விடுதலைக்காகவா? இவை தீர்க்கவேண்டிய பிரசினைகள்.

இவற்றை காந்திய வழியில் சிந்தித்து, ஆராய்ந்து, முடிவு செய்து, செயலைத் தூண்டக்கூடிய கட்டுரைகளை இந்த ஆண்டில் அதிகமாக வெளியிட்டிருப்பதை இத்துடன் சேர்த்துள்ள 4-ம் ஆண்டு அட்டவணை விளக்கும்.

ஐந்தாம் ஆண்டில் கதர் மலர் மேலும் தீவிரமாகப் பணியாற்ற கடவுளின் அருளையும் அன்பர்களின் ஆதரவையும் வேண்டிக்கொள்கிறோம். கதர் மலரை அதிகமானவர்கள் படித்துப் பயன்பெற உதவி செய்யுமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஐந்தாம் ஆண்டு முதல் இப்பத்திரிகை தமிழ் மாதம் 1-உ வாக்கில் அன்பர்களுக்குக் கிடைக்கும்படியாக, ஆங்கில-மீ 15-உ வெளியிடப்படும். ஆகவே, அடுத்த இதழ் அக்டோபர்-மீ 15-உ வெளிவரும்.

Complimentary Copy.

கதர் மலர்

மலர் 4 | கர-௵ ஆவணி-௴ | செப்டம்பர் 1951. | இதழ் 12.

OFFICE OF THE REGISTRAR ... SEP 195[illegible] MADRAS

கம்யூனிஸ்டுகள் விரும்புவதையே நான் செய்கிறேன்.

(ஆச்சாரிய வினோபா பாவே.)

[21–4–'51-ல், சாந்தி யாத்திரையின்போது, தெலுங்கானாவில் நல்குண்டா ஜில்லாவைச் சேர்ந்த 'வாவிலாப்பள்ளி'யில் பேசியது.]

அஞ்சவேண்டாம்.

நேற்று போலீஸ் உங்கள் கிராமத்தைச் சேர்ந்த நான்கு பேரைக் கைது செய்துகொண்டுபோனதாகக் கேள்விப்பட்டேன். கைது செய்யப்பட்டவர்கள் கம்யூனிஸ்டுகளுக்கு உடந்தையாக இருந்து, அவர்களுக்கு ஏதோ உதவி செய்தார்கள் என்பதே அவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றமென்று தெரிகிறது. இவ்வாறு நடந்ததைக் குறித்து நாம் அஞ்சக்கூடாது. போலீஸ்காரர்கள் தம் கடமையைச் செய்கிறார்கள். போலீஸ் உங்கள் உதவிக்காக ஏற்பட்டிருக்கிறதே தவிர, உங்களைத் தொந்தரவு செய்வதற்காகவல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கைதானவர்கள் கம்யூனிஸ்டுகளுக்கு உதவியளித்திருந்தால், அதற்கு, ஒன்று அவர்களிடம் இவர்களுக்குள்ள பயம் காரணமாயிருக்க வேண்டும், அல்லது அவர்களிடம் இவர்களுக்குள்ள அனுதாபம் காரணமாய் இருக்கவேண்டும். பிடிக்கப்பட்டுள்ளவர்கள் அத்தனைபேரும் குற்றவாளிகளென்று எவரும் கருதவேண்டாம். அவர்கள் அஞ்சாமல் நடந்ததை அப்படியே போலீஸிடம் தெரிவிப்பார்களானால், அவர்களுக்குத் தொந்தரவு ஒன்றும் நேராதென்றே நான் கருதுகிறேன்.

பரஸ்பர பயம்.

இன்று ஒரு வாலிபர் என்னைப் பார்க்க வந்தார். அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்; அதாவது, "கம்யூனிஸ்டுகள் வந்து எங்களைப் பயமுறுத்துகிறார்கள். நாங்கள் அவர்களுக்குச் சாப்பாடு போட்டால் போலீஸ் எங்களை பயமுறுத்துகிறது. சாப்பாடு போடாவிட்டாலோ கம்யூனிஸ்டுகள் 'கொன்று விடுவோம்' என்கிறார்கள். இவ்வாறு, இரவு நேரங்களில் கம்யூனிஸ்டுகளிடமும் பகலில் போலீஸிடமும் நாங்கள் அவதிப்படுகிறோம். இந்நிலையில் நாங்கள் என்ன செய்வது?"

அஞ்சா நெஞ்சம் வேண்டும்!

"உங்களை அச்சமின்றி வாழும்படிச் செய்யவே நான் வந்திருக்கிறேன். ஒருவன் பலவந்தமாக உங்கள் வீட்டில் நுழைந்து சாப்பாடு போட்டால்தான் ஆயிற்று என்று சொல்வானானால், அவனுக்கு சாப்பாடு போடவேண்டிய பொறுப்பு உங்களுக்கில்லை" என்று நான் சொன்னேன். அதற்கு அவர்,

"பொறுப்பில்லை என்பது சரிதான். ஆனால், அவர்கள் எங்களைக் கொன்று விட்டால் என்ன செய்வது?" என்று கேட்டார். நான், "ஆண்டவன் எவன் தலையில் இன்று சாகவேண்டுமென்று எழுதிவைத்திருக்கிறானோ அவன் இன்று சாகாமல் தப்பவே முடியாது. கடவுளின் இன்றைய கணக்கில் நமக்குச் 'சாவு' என்று எழுதப்படாதிருக்கும் வரையில் எந்தக் கம்யூனிஸ்டாலும் நம்மை இன்று கொல்லமுடியாது. ஆகவே நீங்கள் சாவுக்கஞ்சுவதை விட்டு விடவேண்டும். சாக அஞ்சுகிறவர்களை உயிருடன் இருப்பவர்களென்று எண்ணக்கூடாது. அவர்கள் ஏற்கெனவே இறந்துவிட்டார்கள். நம்மில் எவரும் இங்கே சதா சர்வகாலமும் இருக்கப் போகிறவர்களல்ல. நாம் அனைவரும் ஒருநாள் போகவேண்டியவர்களே. ஆண்டவன் அழைக்கும்பொழுது நாம் போய்த்தான் தீரவேண்டும். ஆகையால், துப்பாக்கியை ஒருவன் நம்முன் நீட்டுவானானால் மார்பைத் திறந்து காட்டுவதற்கு நமக்குத் துணிவு வேண்டும். கொல்ல வந்தவன் நம் சகோதரனாக இருப்பானானால், நாம், அவனிடம் பரிதாபம் கொண்டு, அவன் எதிரில் அமைதியாக நின்றுகொண்டு, "தம்பி நீ எதையும் என்னிடமிருந்து பலவந்தமாய்ப் பெறுவதென்றால், நான் எதையும் கொடுக்கப்போவதில்லை. என்னைக் கொன்றுவிட்டு எது வேண்டுமோ எடுத்துக்கொள்" என்று சொல்லவேண்டும். நாம் இந்த உலகைவிட்டுப் போகும் பொழுது நம்முடன் இங்குள்ள எதையும் எடுத்துப் போவதில்லை. கொலைகாரர்களை எதிர்த்து நிற்க உதவும் இந்த அஞ்சா நெஞ்சத்தை நாம் அனைவரும் பெறவேண்டும்.

துப்பாக்கிக்கு வலிமை ஏது ?

இன்று ஒரு நண்பர், "ஆந்திரநாட்டில், காகதீயர்களுடைய ஆட்சி நடந்ததற்குப்பிறகு, கடந்த எழுநூறு எண்ணூறு வருஷங்களில் பெரிய வீரன் எவனுமே தோன்றவில்லை," என்றார். ஆனால் எல்லாச் சிரமங்களையும் சமாளிக்கும் சக்தியுள்ள எத்தனையோ விவசாயிகள் இருந்திருப்பார்கள். அவர்களுடைய சரித்திர வரலாறுகளை எவரேனும் எழுதியிருக்கிறார்களா? இதனால் நாம் ஊக்கத்தை இழந்துவிடக் கூடாது. விவசாயி தன்னிடமுள்ள சக்தியை உணரவேண்டும். நீங்கள் பிரகலாதனுடைய சரித்திரம் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். அவன் சிறு பையனாக இருந்த போதிலும் ஹிரண்யகசிபுவை எதிர்த்து நின்றான். ஒரு சிறிய குழந்தையும் "நான் இந்த உடலல்ல, ஆண்டவனுடைய ஒரு சிறு பகுதியேயாகும்; அந்தப் பகுதியே உடலென்ற இந்த அங்கியை அணிந்திருக்கிறது" என்பதை உணருவானானால், அவனை அச்சமே அணுகாது. கையில் துப்பாக்கி இருந்தால் நாம் அஞ்சத்தேவையில்லை என்று எண்ணுதல் தவறு.

என் வழியும், அவர்கள் வழியும்.

இதையே பாருங்கள். ஏழை எளியோருக்குச் சேவை செய்யவேண்டுமென்றே கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள். அவர்களுடைய கருத்து என்னவோ சரிதான். ஆனால், அவர்கள் அதற்குக் கையாளும் முறையினால், ஏழை விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுவதற்கு மாறாக, அவர்கள் அஞ்சி அஞ்சிச் சாகவேண்டியிருக்கிறது. காந்திஜி நம்மிடையே தோன்றி, நம் அனைவருக்கும் நெஞ்சில் உரம் தோன்றும்படிச் செய்தது நீங்கள் அறிந்ததே. ஆங்கிலேயர் நம்மிடமிருந்த ஆயுதங்களையெல்லாம் பறித்துக்கொண்டார்கள். காந்திஜியோ நமக்கு ஆயுதமே தேவையில்லை என்று சொன்னார். சத்தியாக்கிரகப் போரில், அதுவரையில் வீட்டை விட்டு வெளியே வராத பெண்கள், தம் உயிரையும் பொருட்படுத்தாமல், ஆயிரக்கணக்கில் வெளிவந்து கலந்துகொண்ட அற்புதத்தை நாம் அனைவரும் கண்டோம். இதிலிருந்து வெளியாவதென்ன? ஆயுதங்களுக்குள்ள சக்தி ஒரு சக்தியே அல்ல, ஆன்ம சக்திதான்

சென்னை-600
127781.

உண்மையான சக்தி என்பதே. ஆனல் கம்யூனிஸ்டுகளுக்கு இதுவரையில் ஆன்மாவிடம் நம்பிக்கை ஏற்படவில்லை; அவர்கள் ஆயுதங்களையே நம்பிக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் இப்படியே இருந்து வருவார்களானல், இந்திய மக்களுக்கு அவர்களிடம் அனுதாபமே இல்லாமற்போவதை அவர்கள் ஒரு காலத்தில் உணருவார்கள். ஆனல், அவர்கள் ஆயுதங்களைத் துறந்து ஆன்மாவை நம்புவார்களானல் நான்கூட அவர்களின் கட்சியில் சேருவதை அவர்கள் காண்பார்கள். அப்பொழுது நான் அவர்களிடம், "நானும் ஒரு கம்யூனிஸ்டுதான். நாம் இருவருமே சேர்ந்து இந்தியாவுக்கு சேவை செய்வோம்" என்பேன். ஆனல் இதுவரையில் அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் பிளவையும் குழப்பத்தையும் உண்டாக்குவதை ஒரு உபாயமாய்க் கொண்டிருக்க, நான் கிராமத்தை ஒற்றுமையாக அன்புடன் வாழச்செய்வதையே உபாயமாகக் கொண்டிருக்கிறேன்.

வாமனன் அளந்த முதல் அடி.

நான் இப்பொழுதுதான் ஒரு சிறு கிராமத்தைக் கொள்ளையிட்டுவிட்டு வந்திருக்கிறேன்! அங்குள்ள ஒரு தனவந்தரை தம்மிடமிருந்த நிலத்தில் 50 ஏக்கரை ஏழைகளுக்கு கொடுக்கச் செய்தேன். இதற்கு முன்னரும், எட்டு கிராமங்களில் 100 ஏக்கரும், 75 ஏக்கரும் பணக்காரர்களிடமிருந்து வாங்கி ஏழைகளுக்கு வினியோகிக்கச் செய்தேன். இன்று உங்கள் கிராமத்தையும் கொள்ளையடிக்கப் போகிறேன்! ஆனல் கம்யூனிஸ்டுகள் 5000 ஏக்கர் நிலமுள்ளவர் 100 ஏக்கர் நிலத்தைக் கொடுத்துவிட்டால் அதனல் என்ன ஆகிவிடும் என்று கேட்பார்கள். நான் அவர்களுக்குச் சொல்வது, "கொஞ்சம் பொறுங்கள். தம்மிடமுள்ள 5,000 ஏக்கரிலிருந்து 100 ஏக்கரைக் கொடுக்கிருரே, அவர் அதை பிரியமாகக் கொடுத்தாரானல், நான் அதைப் பெற்றுக் கொள்வதோடு, அவரிடம் எஞ்சியுள்ள 4,900 ஏக்கரும் என்னுடையதே என்று எண்ணிக்கொள்வேன். நாம் ஏழைகளுக்கு நிலம் கொடுப்பதனல் நமக்கு அவர்களுடைய அன்பு கிட்டுகிறது என்பதை இவர்கள் காண்பார்களானல் 'இன்னும் தருகிறோம், இன்னும் தருகிறோம்' என்று அவர்களே முன் வருவார்கள்".

மூன்ருவது அடி வைக்கையில்

ஆனல் கம்யூனிஸ்டுகள், "பாவம் எவ்வளவு அப்பாவி இவரெ"ன்று என்னைக் குறித்துச் சொல்வார்கள். என் பதில்: ஐயா, நீங்கள் என்னை அப்படி நினைக்கவேண்டாம். எனக்கு என் வேலை தெரியும். கொஞ்சம் உணர்ச்சியை, ஏழைகளுக்கு நிலமளிப்பதில் நன்மையுண்டு என்ற எண்ணத்தை, எங்கும் தோன்றும்படிச் செய்துவிட்டால் போதும். பிறகு அதற்கு உதவக்கூடிய சட்டதிட்டங்களை நிறைவேற்றச் செய்துவிடுவேன். இன்று 100 ஏக்கர் கிடைத்தது. 5 வருஷங்களுக்குப் பிறகு இன்னும் 100 ஏக்கரும், 10 வருஷங்களுக்குப் பிறகு மேலும் 100 ஏக்கரும் கிடைக்கும் என்று நான் வாளாவிருக்கமாட்டேன். இவ்வாறு 4,000 ஏக்கர் கிடைப்பதற்குள் வருஷம் 100 அல்லவா கடந்துவிடும். விஷயம் என்னவென்ருல், ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்து காற்றின் போக்கை மாறும்படிச் செய்து விடுவோமானல், தேவையான சட்டங்கள் தாமே உடன் வந்தசேரும். ஆனல் முதலில் தக்க சூழ்நிலை தோன்றினலல்லது மக்கள் சட்டத்தை விரும்பமாட்டார்கள். பிள்ளையின் தகப்பனர் இப்படித்தானே செய்கிருர். குழந்தைக்கு மிட்டாய் கொடுக்கிருர். மிட்டாய் கொடுப்பது அன்பினல். பிறகு அடி கொடுக்கிருரென்ருல், அதற்கும் காரணம் அன்புதான். ஒரு திருடன் ஒரு குழந்தைக்குக் கொடுக்கும் மிட்டாய் அன்புடன் கொடுக்கப்படுவதல்ல. ஆனல் ஒரு தாய் தன் குழந்தையை அடிப்பதற்குக் காரணம் அன்பேயன்றி வேறல்ல.

இவ்வாறு நான் தனவந்தர்களிடமிருந்து நிலம் பெறுவது அன்பினுலேயே. நான் போகுமிடங்களில் எல்லாம் மக்கள் ஏன் எனக்கு நிலம் தர முன் வருகிறுர்களென்று எனக்கே வியப்பாய் இருக்கிறது. இதுவும் காந்திஜி போட்ட சொக்குப்பொடியில் சேர்ந்ததா? நான் காந்திஜியைச் சேர்ந்தவன் என்ற விஷயம் மக்களுக்குத் தெரியுமாகையால் அவர்கள் அன்புடன் நிலமளிக்க முன் வருகிருர்கள். ஆனல் இதில் காந்திஜியின் மகிமை இருந்த போதிலும், அதோடு, இன்னும் ஒரு விஷயமும் இருக்கிறது. அதுதான் ஆண்டவனுடைய அருள்; அவனுடைய லீலா விநோதம். கடவுளின் கிருபையினல், எவரும் இந்த எல்லா நிலங்களையும் தன்னுடன் சுருட்டி எடுத்துக் கொண்டு போகமுடியாதென்பது எல்லோருக்கும் தெரியும். பார்க்கப் போனல் இவ்வளவு ஏராளமான நிலங்களையும் தாமே உபயோகிப்பது என்பதும் சாத்தியமல்ல. இதனலேயே இவ்வளவு அதிக நிலத்தைத் தம் கையில் வைத்திருப்பதால் பயனில்லை என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது. இதனல் தான் இன்று, வாமனவதாரம் போல், "உங்கள் நிலத்தைக்கொடுத்து விடுங்கள். மூன்றடி நிலம் கொடுத்தாலும்போதும்" என்று சொல்கிறேன். ஆனல் எனக்குக் கிடைத்திருக்கும் 100 ஏக்கர் நிலமிருக்கிறதே, அது மட்டும் என்னுடையது என்பதல்ல; எஞ்சியுள்ள 4,900 ஏக்கர் நிலம் முழுமையும் என்னுடையதே. வாமனன் அளந்த 3 அடிகளுள் மூன்று லோகமும் அடங்கிவிட்டது போன்றது இந்த விவகாரம். ஆகையால், இந்த எல்லா விசேஷங்களையும், இந்த முழுப் பொருளையும், ஏழைகள் புரிந்துகொள்வார்களானல், தனவந்தர்கள் அறிவார்களானல், கம்யூனிஸ்டுகள் உணருவார்களானல் கிராமம் பூராவுமே சௌக்கியமடையும். நான் இப்பொழுது செய்வது கம்யூனிஸ்டுகளின் காரியமே. நான் இப்பொழுது ஒரு ஆரம்பம் செய்கிறேன். பிறகு சட்டம் அதைப் பூர்த்தி செய்யும். இந்த ஆரம்ப வேலை செய்தாலன்றி, நம் வேலை வெறும் சட்டத்தினல் மட்டும் நிறைவேருது. தானத்தில் ஆரம்பமாகும் இது சட்டத்தினல் பூர்த்தியாகும். ஆனல் கம்யூனிஸ்டுகளோ பலாத்காரத்தில், அடிதடியில், ஹிம்சையில் ஆரம்பித்து சட்டத்தில் கொண்டுபோய் முடிப்பார்கள். இறுதியில் அவர்களும் சரி, நானும் சரி, சட்டத்தில்தான் கொண்டுபோய் முடிப்போம். ஆனல் நான் தொடங்குவது அன்பிலும் தானத்திலுமாயிருக்க, அவர்கள் அடித்துக் கொள்ளையிடுவதில் ஆரம்பிக்க விரும்புகிருர்கள்.

—"ஸர்வோதயம்" ஜூன் '51.

★ கல்வி உலகில் புத்துணர்ச்சி. ★

(ஆச்சாரிய விநோபா பாவே.)

ஆதாரக் கல்வியின் அறைகூவல்.

சுமார் 14 வருஷங்களுக்குமுன் ஒரு பெரிய கருத்து நம் நாட்டிற்குக் கிடைத்தது. பார்க்கப்போனல், அதைப் புதியதென்று சொல்வதற்கில்லை. ஏனெனில், உண்மையின் அனுபவம் எதையும் புதியதென்று சொல்வதற்கில்லை. அது என்றுமிருப்பது; அதன் விதை பண்டைக் காலத்திலேயே போடப்பட்டிருக்க, அதில் ஏதேனும் ஒரு அம்சம் நம் காலத்திற்குப் பிடித்தமாய்த் தோன்றியவுடன் நாம் அதையே புதிதாய்க் கண்டுபிடித்துவிட்டதாக எண்ணிக்கொள்கிறேம். நம்மைப் பற்றியவரையில் அது புதிதே. நாம் அதில் காணும் புதுமை அதன் மூலமாக

நமக்கேற்படும் விழிப்பே. இப்பொழுது 13, 14 வருஷங்களின் ஆடையை அந்தக் கருத்து அணிந்திருப்பதோடு, அது, இதற்கிடையில் ஓரளவு சோதிக்கப்பட்டும் அதன் தவம் வளர்ந்தும் வந்திருக்க, இப்பொழுது நாட்டின் முன் ஒரு அழைப்பின் உருவில் நின்றுகொண்டிருக்கிறது. அது நாட்டை விளித்து, "நான் உனக்காக வந்திருக்கிறேன். நீ என்னை ஏற்றுக்கொள்; என் சேர்க்கையினால் நீ புத்துயிர் பெறுவாய்" என்று சொல்கிறது. சென்ற பல வருஷங்களில் எத்தனையோ சோதனைகள் நடந்திருக்கின்றன; இனிமேலும் நடக்கும். நான் இதைப்பற்றியெல்லாம் எதுவும் சொல்லப் போவதில்லை. ஆனால் இன்று இதிலுள்ள சாரத்தை, உண்மை அம்சத்தை, இதனால் விளையக்கூடிய பயனை எவரும் ஆட்சேபிக்கவில்லை. அதாவது, இது விஷயமாகச் சிறிதேனும் சிந்தித்தவர் அனைவரும் இதன் சிறப்பை உணர்ந்திருக்கிறார்கள்.

சுதந்திரக் கொடியின் கீழ் அடிமைக் கல்வி ஏன்?

ஆனால், நமக்கு சுயராஜ்யம் வந்து 3 வருஷங்களாகியும், நம்மால் இதை முழுதும் அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லையே என்று எண்ணும் பொழுது, எனக்கு ஒருபுறம் வியப்புண்டாக மறுபக்கத்தில் வருத்தமும் உண்டாடாகிறது. நான் ஒரு விஷயத்தை உதாரணமாக ஏற்கெனவே சொன்னதுண்டு. அதையே இங்கும் சொல்கிறேன். அதாவது, பழைய அரசாங்கத்தின் கொடியை நாம் இன்றும் பொறுத்துக் கொண்டிருப்போமா? கொடியின் விஷயம் எப்படியோ அப்படியேதான் கல்வியின் விஷயமும். எந்தக் கல்வி நம்மை அடிமைகளாகத் தொழுவத்தில் கட்டி வைப்பதற்குத் தகுந்ததென்று ஆரம்பிக்கப்பட்டதோ அதையே நாம், சுயராஜ்யம் பெற்ற பிறகும், அப்படியே விட்டு வைப்போமானால் நம்முடைய அறியாமைக்கு இதிலும் சிறந்த ருசு வேறு என்ன வேண்டும்? ஆனால் நாம், "இது சோதனைப் பருவத்திலேயே இருக்கிறது; இன்னும் பழுக்கவில்லை. ஆகையால் இதை அருந்துவதற்கு இன்னும் சமயம் வரவில்லை. நன்றாகப் பழுத்த பிறகு அருந்துவோம்" என்று எண்ணுவதாயிருந்தால், அதுவும் சரிதான். நான் பொறுத்திருப்பதற்குத் தயார். ஆனால் ஒரு கேள்விமட்டும் கேட்கிறேன். சோறு உலையிலிருக்கிறது, இன்னும் வெந்தாகவில்லை என்பதற்காக நாம் கல்லையும் மண்ணையும் தின்று வயிற்றை நிரப்பிக்கொள்வோமா? இது இன்னும் பக்குவமாகவில்லையென்றால், நீங்கள் இப்பொழுது தின்றுகொண்டிருக்கிறீர்களே அது பக்குவமான உணவா? கல்லையும் மண்ணையும் போன்றதையல்லவா தின்றுகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் இதை உடனே எறிந்து விட்டு, இனி நமது கல்வி எப்படி இருக்க வேண்டுமென்று சரியாகப் புரிவதற்கு இன்னும் சிறிது காலம் செல்லுமென்று தோன்றுகிறது. அதுவரையில் நாம் கல்வியளிப்பதையும் கற்பதையும் நிறுத்தி விட்டு, நாமும் நம் குழந்தைகளும், உடலால் உழைத்து, உணவும் உடையும் தயாரிப்பதில் முனைவோம் என்று முடிவு செய்ய வேண்டும். ஆனால், கொடியின் விஷயத்தில் நமக்கு இருக்கக்கூடிய உணர்ச்சியும், வேகமும் கல்வியின் விஷயத்தில் இல்லை. இதைத்தான் நான் நம் அறியாமை என்கிறேன். அல்லும் பகலும் என்னைப் பெரிதும் சிந்தைக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கும் ஒரு விஷயத்தை நான் நாலு வார்த்தைகளில் பணிவுடன் உங்கள் முன் தெரிவித்து விட்டேன்.

ஆதாரக் கல்வியின் உண்மைப் பொருள்.

நாம் இந்தக் கல்விக்கு ஆதாரக் கல்வியென்று பெயரென்னவோ கொடுத்து விட்டோம். ஆனால் இதன் உண்மைப்

பொருளை நாம் புரிந்து கொள்ளவில்லை. ஆதாரக் கல்வி என்பதற்கு, நாம், குழந்தைகளுக்கு அளிக்கவேண்டிய ஆரம்பக் கல்வியென்று பொருள் கொள்கிறோம். இதன் பொருள், இது மட்டுமல்ல; நாட்டில் ஆரம்பம் முதல் கடைசி வரையில் அதை ஆரம்பக் கல்வி யென்றாலும் சரி, மத்தியதரக் கல்வி யென்றாலும் சரி, உயர்தரக் கல்வி யென்றாலும் சரி, அந்தக் கல்வி முழுமையுமே இதை ஆதாரமாய்க்கொண்டு அமைக்கப்படவேண்டும். கிராம மக்களுக்கு இந்தக் கல்வியும் நகரத்தில் உள்ளவர்களுக்கு வேறொன்றும் என்றால், அது சரியாகாது. முதல் நாலு வருஷத்திற்கு இந்தக் கல்வியை நடத்துவோம், பிறகு இதனுடன் சம்பந்தமே இல்லாத வேறொன்றை நடத்துவோம் என்பதும் சரியல்ல. சோதனைப் பருவத்தினுள்ள இதை அகதிகளிடையே நடத்துவதோடு நிறுத்திக் கொள்வோம், மற்றவர்களுக்கெல்லாம் வேறு வகைக் கல்வி இருக்கட்டும் என்பதும் சரியாகாது. அதாவது, நம் நாட்டின் கல்வி முழுதையும் இந்தக் கல்வி முறையின் அடிப்படையிலேயே அளித்தல் நமக்குச் சம்மதம் ஆகும் பொழுதுதான் நாம் இதை ஆதாரக் கல்வி யென்று அழைத்தல் தகும். கல்வி சம்பந்தமான சோதனைகளில் ஈடுபட்டிருப்பவர்களைப் பார்த்து நகரங்களுக்கு எத்தகைய கல்வியை அளிப்பது என்று கேட்கும்பொழுது, "ஐயா, இது நகரங்களுக்கு ஏற்பட்டதல்ல, கிராமங்களுக்காக அமைந்தது" என்று பதில் சொல்வது என் காதில் விழுந்திருக்கிறது. இது மிகவும் தவறான கருத்தாகும். இந்தக் கல்வி எல்லோருக்கும் எல்லா இடங்களிலும் உள்ளவர்களுக்குமென அமைந்ததாகையால், இதில் நகரம் கிராமம் என்ற பாகுபாட்டிற்கு இடமேயில்லை.

கிராமத்தைச் சூறையாடும் நகரக் கல்வி.

இன்று நகரங்களில் உள்ள சூழ்நிலையை இப்படியே நாம் விட்டுவைக்க விரும்புவோமானால், இந்நாட்டில் அமைதிக்கே இடமிராது. எந்த கிராம மக்களின் உழைப்பின் பயனாக நகரங்கள் அமைந்திருக்கின்றனவோ, அந்த கிராம மக்களுக்குச் சேவை செய்ய உதவக் கூடிய கல்வியையே தம் குழந்தைகளுக்கு அளிக்கவேண்டுமென்று நகரவாசிகள் முடிவு செய்யவேண்டும். கிராமக் குழந்தைகள் நாட்டுப் பணிக்கு உதவக்கூடிய கல்வியைப் பெற, நகரங்களில் உள்ள குழந்தைகள் நாட்டைச் சூறையாடுவதற்கு உதவும் கல்வியைப் பெறுவதென்பது சரியல்ல. இது வேறு எங்கு சாத்தியமானாலும், இங்கே இது இனி நடைபெறாது. ஏனெனில், நாடு விழிப்படைந்துவிட்டது. விழித்துள்ள தேசம் இத்தகைய வேற்றுமைகளைப் பொறுத்துக்கொண்டிராது. ஆகவே, ஆதாரக் கல்வி என்பதன் இந்த உண்மைப் பொருளை நாம் மறவாதிருப்போமாக.

கல்வியை நிர்வாகம் அழித்துவிடும்.

இதற்குச் சில ஆபத்துக்கள் உண்டு; அவற்றையும் உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். நாம் இங்கே இதுபற்றிய சோதனைகள் சில நடத்தி வருகிறோம். அதுபற்றிய சில விஷயங்களை நீங்கள் இந்தக் கண்காட்சியில் காணலாம். இங்கே அகில இந்தியாவிலிருந்தும் பலர் கல்வி பெறுவதற்காக வருகிறார்கள். எல்லா மாகாணங்களையும் நீங்கள் இப்பொழுதுதான் இங்கே கண்டீர்கள். எல்லா இடங்களிலிருந்தும் மக்கள் இங்கே வந்து, இங்கே கிடைக்கக்கூடியதைப் பெற்றுப் போவார்கள். எனக்கு இதிலும் ஆபத்து இருப்பதாகத் தோன்றுகிறது. மேலும் சர்க்காரின் மூலமாக நடத்தப்படும் கல்வியில் உள்ள ஆபத்து இருக்கவே இருக்கிறது. நான் சொல்வ

விரும்புவது என்னவென்றால், இங்கே நீங்கள் காணக்கூடியவை கற்கக்கூடியவை ஆகியன வெல்லாம் உங்களுக்கு வழிதுலக்கவே உதவும். அவற்றை நீங்கள் அப்படியேதான் கொள்ள வேண்டும். இல்லையேல், ஒரு பக்கத்தில் சர்க்காரின் சட்டதிட்டங்களும், மறு பக்கத்தில் ஆதாரக்கல்விச் சங்கத்தின் விதிகளும் உப விதிகளுமாகச் சேர்ந்து நம் கல்வி முழுதையுமே நசுக்கிக் கொன்றுவிடும். எனக்கு விதிகள் என்றாலே எப்பொழுதும் பயம். அதிலும், முக்கியமாக, கல்வியின் விஷயத்தில் விதிகளும் நிர்வாகக் கெடுபிடிகளும் தலையிடுமானால் கல்வி உருவாவதற்கே இடமில்லாமற் போய்விடும். ஆதாரக் கல்வியின் விஷயத்தில் இதுவரையில் நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்கள், நாம் செய்துள்ள சோதனைகள் ஆகியவற்றின் விளைவை நீங்கள் ஆதாரக் கல்விச் சங்கத்தின் மூலமாகப் பெறலாம். அது உங்களுக்குக் கிடைத்துள்ள ஒரு முன்மாதிரியாகும். நீங்கள் அதைக் குறித்து ஆலோசித்து, சுய அறிவைப் பயன்படுத்தி, ஒவ்வொரு இடத்திலும் நீங்கள் சொந்தத்திலேயே சோதனைகள் செய்து பார்க்கவேண்டுமென்பது என் விருப்பம்.

ஆதாரக் கல்வியின் வெவ்வேறு காட்சிகள்.

ஒரு நண்பர் என்னிடம் வந்து இங்கே நடக்கும் ஆதாரக் கல்வியின் சோதனைகளைப் பார்க்க விரும்புவதாய்ச் சொன்னார். நான் அவரிடம் "ஐயா, சேவாகிராமத்திற்குப் போங்கள். அங்கே ஆதாரக் கல்விச் சங்கத்தில் நடப்பவற்றைப் பாருங்கள். பிறகு மகிளாசிரமத்திற்குப் போங்கள்; அங்கே நடப்பதையும் பாருங்கள். பிறகு, கோபுரிக்குப் போங்கள்; அங்கே இருப்பதைப் பாருங்கள். பிறகு மகன்வாடிக்குப் போங்கள்" என்றெல்லாம் சொன்னேன். அவர் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, கடைசியில், மீண்டும் என்னிடம் வந்தார். வந்தவர், "ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு காரியங்களல்லவோ நடக்கின்றன? சேவாகிராமத்தில் நடப்பதை மகிளாசிரமத்தில் காண முடியவில்லையே? அங்கு வேறு என்னவோ நடக்கிறதே! கோபுரியிலோ, இந்த இரண்டு இடங்களிலும் காணப்படாத வேறொன்று நடக்கிறது. அங்கே எங்கு கண்டாலும் ஒரே தொழிற்சாலை மயமாயிருக்கிறது. எங்கும் வேலை நடந்த வண்ணம் காணப்படுகிறது. மகிளாசிரமத்திலோ, கல்வியளிக்கப்பட்டபோதிலும், சமையலும் செய்கிறார்கள், கக்கூஸும் கூட்டுகிறார்கள், துணியும் தைக்கிறார்கள். ஆனால், சேவாகிராமத்தில் ஆதாரக் கல்வி எப்படி அளிக்கப்படுகிறதோ அப்படி இங்கு அளிக்கப்படவில்லையென்பதைக் கண்டேன்" என்றார். நான் அவரிடம், "இவை எல்லாமே ஆதாரக் கல்விதான். இவையெல்லாம் ஆதாரக் கல்வியின் பல வகைச் சோதனைகள்" என்று பதில் சொன்னேன்.

ஒரு முறையல்ல, கருத்தாகும்.

இது ஒரு 'முறை' யல்ல, 'கருத்' தாகும். ஆதாரக் கல்வி எல்லா இடங்களிலுமே ஒரே வகையில் ஒரே உருவினதாய் இருப்பதென்பது சரியல்ல. அதற்குப் பல உருவங்கள் இருத்தல் கூடும். இந்த ஆதாரக் கல்வியின் ஒரு முறை யென்று பலர் கருதுவதைக் காண எனக்கு அச்சமுண்டாகிறது. ஒரு கல்வி முறை யென்றால், அதை அமுலில் நடத்துவதற்குப் பிரத்தியேகமான 'டெக்னிக்' அல்லது உபாயம் இருக்கும். இதையும் அவ்வாறே கருதி, இதற்கு முன் தோன்றிய எத்தனையோ முறைகளைப் போல் இதுவும் ஒரு புதிய முறையாக வந்திருக்கிறதென்று பலர் எண்ணுகிறார்கள். நான் சொல்வது, இது ஒரு முறையல்ல, ஒரு கருத்தே யாகும். பிரம்மத்தைப் பற்றிய மிகவும் பரந்த ஒரு கருத்து பண்டைக் காலத்

தில் இந்தியாவுக்குக் கிடைத்ததே, அதைப் போன்றதொன்றே இது. அந்த ஒரு பிரம்மத்தைப் பற்றிய கருத்தி லிருந்தே அத்வைத வழிபாடும், துவைத வழிபாடும், விசிஷ்டாத்வைத வழி பாடும், சுத்த அத்வைத வழிபாடும் தோன்றின. அதே வகையில், இது கல்வி பற்றிய ஒரு கருத்தேயன்றி, கல்வியின் முறையல்ல.

வாழ்க்கை — கூறுகளில் அல்ல, பூரண உருவில்.

ஒரு சமயம் நண்பரொருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். மேல் நாட்டுக் கல்வி முறையில் சுலோகங்கள் முதலியன மனப்பாடம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்து வதில்லையே. இது சரியல்ல. குழந்தை களுக்குப் பொறுக்கியெடுத்த நல்ல சுலோகங்களும் செய்யுட்களும் நெட் டுருவா யிருக்கவேண்டும். எனக்கு எத்தனையோ சுலோகங்கள் மனப்பாட முண்டு. இவற்றால் எனக்கு எத் தனையோ நன்மை யேற்பட்டிருக்கிறது. நமது பெரியோர்களின் சிறந்த அனு பவங்களைத் தாங்கி நிற்கும் இந்த செய்யுட்கள் நமக்குப் பாடமாயிருந் தால், எவ்வளவு உதவியா யிருக்கும். ஆகையால், மேல் நாட்டுக் கல்வி நிபுணர்களின் அனுபவம் இவ் விஷயத்தில் நம் அனுபவத்திலிருந்து வேறுபடுகிறது. அவர்கள் உலகத்தைப் பல்வேறு கூறுகளாக்கி, அவற்றைப் பல கிளைகளாக்கித் தனித்தனியாக நோக்க, நாம் அகில உலகையும் ஒருமிக்கச் சேர்த்துப் பார்க்கிறோம். இது நமக் கும் மேல்நாட்டுக்கு முள்ள ஒரு வித்தி யாசம். ஆகையால் நாம் இலக்கியத்தில் காணப்படும் தலை சிறந்த கருத்துக்களை மனப்பாடம் செய்து வைக்கிறோம். இவ்வாறு செய்யாதவர்கள் அறிவுக்கு அதிக மகத்துவம் அளிக்கிறார்கள். அறிவுக்குள்ள சிறப்பை மறுப்பதற் கில்லை. ஆனால் உள்ளத்தின் உணர்ச்சி யை விடுவதற்கில்லை. உள்ளமும் ஒரு முக்கிய வஸ்துவே. அதைப் போஷித்து வளர்ப்பதற்கு உயர்ந்த கருத்துக்களைப் பாடம் செய்து கொள்ளுதல் உசித மாகும், அவசியமாகும் என்றேன். உடனே அவர், "நீங்கள் சொல்வது சரி தான், நான் புரிந்து கொண்டேன். ஆனால், தொழில் பயிற்சியுடன் இதைப் பொருத்துவது எப்படி?" என்று கேட் டார். நான் அவரிடம் பதிலுக்குப் பின் வருமாறு கேட்டேன்: "உங்கள் குழந் தைகளும் இரவில் தூங்கப் போகி றார்கள். நானும் தூங்கப் போகிறேன். ஆசிரியரும் தூங்கப் போகிறார். அப் பொழுது தொழில் பயிற்சிக்கும் தூக்கத் திற்கும் என்ன சம்பந்தமென்று எனக்குக் கொஞ்சம் சொல்லுங் களேன்?" என்றேன். அவர், "தூங்கிய பிறகு உற்சாகம் பிறக்கும். தொழில் செய்வதற்கு உற்சாகம் வேண்டும். சம்பந்தம் தெரிந்துவிட்டதல்லவா?" என்றார். நான், "இதே வகையில் கவனி யுங்கள். மனிதனிடம் ஆன்மா ஒன்று இருக்கிறது. அந்த ஆன்மாவின் சக்தி யினால்தான் உடலுக்கு சக்தி வருகிறது. உடலுக்கு சொந்தமான சக்தியில்லை. ஆன்மாவிலிருந்து வேறுபட்ட உடலை உலகத்தில் உடலென்று அழைப்ப தில்லை; அதைப் பிணமென்று அழைத்து, மயானத்திற்கு எடுத்துப்போய் விடு கிறோம். எந்த உடலில் ஆன்மா இருக் கிறதோ அதில்தான் செயல்திறன் காணப்படுகிறது. ஆகவே, ஆன்மா வின் வளர்ச்சிக்காக, அதன் சமாதானத் திற்காக, சில உயர்ந்த கருத்துக்கள் எப்பொழுதும் நினைவிலிருத்தல் அவ சியம்" என்றேன்.

நான் இதை ஒரு உதாரணமாகவே சொன்னேன். ஏனெனில், இப் பொழுது பலர் இதை ஒரு 'முறை' யாக்க முயன்றுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வகுக்கவிருக்கும் முறையில் இதையும் சேர்த்துப் பிணிப்பார்க ளானால் இது ஜீவனற்ற தாகிவிடும். பிறகு சொந்தமாக எதைக் குறித்தும்

(407-ம் பக்கம் பார்க்க.)

ஜனநாயகத்தின் அடிப்படை:

கிராமவாசிகளுக்காக, கிராமவாசிகளின், கிராம ஆட்சி.

ஸ்ரீ ஜே. ஸி. குமரப்பா.

[சென்ற ஏப்ரல் மாதம் 8-ம் தேதி சிவராம்பள்ளி ஸர்வோதய சம்மேளனத்தில் பேசியதின் சாரம்.]

ஜனநாயகத்தின் உண்மை லட்சணம்.

ஜனநாயகம்: இந்நாளில் இந்தச் சொல் எங்கெங்கும் அடிபடுகிறது. இதைப்பற்றி ஒவ்வொருவரிடமும் பலவித கருத்துக்கள் இருக்கின்றன. காலத்துக்கேற்ப இச்சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம். கொள்கைகளைப்பற்றிய சச்சரவும் எழுகிறது. இங்கிலாந்து ஒரு ஜனநாயக நாடு என்கிறது; அமெரிக்கா தான் மிகவும் நவீனமான ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் நாடு என்கிறது; சோவியத் ரஷ்யாவோ, சுயமான ஜனநாயக நாடு தானேதான் என்று சொல்லிக்கொள்கின்றது. அப்படியென்றால் ஜனநாயகத்தின் உண்மையான லட்சணந்தான் என்ன?

இந்தியாவில், ஜனநாயகத்தைப்பற்றி அரசியல் நிர்ணய சபையின் அபிப்பிராயம் நமக்குத் தெளிவாகிவிட்டது. பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களிலிருந்து சொற்களை எடுத்துத் தொகுத்து, "இந்தியாவின் அரசியலமைப்பு" என்ற பெரும் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தியா புராதனப் பண்பாடுடைய ஒரு நாடு என்றாலும், போலி ஜனநாயக நாடுகளின் உபயோகமற்ற குப்பைகளிலிருந்து இரவல் வாங்கும்படி நேர்ந்துள்ளது. இது நமக்குப் பெருமையளிப்பதல்ல.

நமது ஜனநாயகம் நம் புராதனப் பண்பாட்டை அடிப்படையாய்க்கொண்டிருக்கவேண்டும். அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா இவற்றின் ஜனநாயகக் கொள்கை, அவை ஜனநாயக நாடுகளே அல்ல என்று சொல்லுமளவுக்கு முரணாயிருக்கிறது. நெருக்கடியின்போது, அங்கு ஜனநாயகம் ஸ்தம்பித்துவிடுகிறது. நெருக்கடியால் சிதறுண்டுபோகும் ஜனநாயக அமைப்பில், ஜனநாயகத்தைக் காணவியலாது. ஹிட்லர், முஸோலினி, சர்ச்சில், ரூஸ்வெல்ட் இவர்களெல்லாம் ஜனநாயகப் போர்வையில் ஒளிந்திருந்த முதல்தரமான சர்வாதிகாரிகள். இங்கிலாந்தும் அமெரிக்காவும், இன்றுங்கூட, மந்திரி சபையிலுள்ள ஒரு சிலரின் ஆதிக்கத்திலேதான் இருக்கின்றன.

கிராமத்திற்காக, கிராமவாசிகளால், கிராம ஆட்சி.

உண்மை ஜனநாயகமென்பது, தனக்கு வேண்டிய ஊட்டத்தைப் பொதுமக்களிடமிருந்து பெறுவதாயிருக்கும். மேநாடுகளிலோ, கீழிருந்து மேல்வரை அதிகாரஞ் செலுத்துவதுதான் நடைபெறுகிறது. தேர்தலின் போது வெளியுலகத்திற்கு வரும் ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த பின்பு, அங்கு ஜனநாயகத்தின் அறிகுறி தென்படுவதில்லை. ஜனங்களால் ஜனங்களுக்காக ஜனங்களைக் கொண்டு ஏற்படும் சர்க்கார், இதுதான் ஜனநாயகத்தின் மூலக்கருத்து. எனவே, நமது நாட்டில், சர்க்கார், கிராமவாசிகளால் கிராமவாசிகளுக்காக கிராமவாசிகளைக்கொண்டு அமைக்கப்பட்டதாயிருக்கவேண்டுமென்பது தெளிவாகிறது. இங்கு கிராமவாசிகளே பெரும்பான்மையோராதலால், சர்க்காரும், கிராமவாசிகளின் நலனுக்காக அமைந்த கிராமவாசிகளின் சர்க்காராய் இருக்கவேண்டும். தற்கால ரீதியில் இந்தியாவில் ஜனநாயகம் என்றுமே இருந்ததில்லை, ஆனால் நம் மூதாதையரின்

பெருமைக்குக் காரணம் என்னவென்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டிய அவசியம் நேர்ந்துள்ளது. புதிய நிலைக்குத் தக்கவாறு நாம் அத்தகைய தலைமையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

மேநாடுகளின் அரசியல் ஜனநாயகம், பொருளாதார அமைப்பை அடிப்படையாகக்கொண்டது. பொருளாதார அமைப்போ, பெரிதும் தொழிலியல் முறையையும் வர்த்தகத்தையும் சார்ந்தது.

மனிதனின் கடமையா, கொள்ளை லாபமா?

நம் பொருளாதார வாழ்க்கையமைப்புக்கான வழிகள் இரண்டு. முதலாவது, வாழ்க்கையின் லட்சியத்தை மையமாகக் கொண்டது. ஒரு தாயை உதாரணமாக எடுத்துக்கொண்டால், அவளுக்குத் தன் குழந்தைகளின் க்ஷேமந்தான் எல்லாம். தான் செய்யும் எந்த வேலையும் அளவுக்கு மிஞ்சியதென்று அவள் கருதுவதில்லை. தான் சமைக்கும் ஆகாரம் குழந்தைகளுக்கு நன்மை தரவல்லதா என்பதில்தான் அவளது கண்ணும் கருத்தும் இருக்கிறது. ஆனால் ஹோட்டல் காரரும் சமைக்கிறார்கள். ஹோட்டல் காரரின் எக்ஸ்-ரே கண் வருபவரின் ஜேபியிலுள்ள பணத்தைக் கண்டுகொள்கிறது. அதைக் கறப்பதற்கான வழியைச் சிந்திக்கிறார். கொள்ளையடிப்பதென்றால் எளிது, ஆனால் சட்டம் இடந்தராது. எனவே, எவ்வளவு குறைவாய் ஒரு பொருளைக் கொடுக்கமுடியுமோ அவ்வளவு குறைவாய்க் கொடுத்து, முடிந்தவரை பணத்தைக் கைப்பற்றும் 'யுக்தி' யைக் கையாளுகிறார். தாம் கொடுக்கும் பொருளின் தரத்தைப்பற்றி அவருக்குக் கவலையில்லை. இவ்வாறு குறைந்ததைக் கொடுத்து நிறையப் பெறுவதுதான் தொழிலியல் பொருளாதார அமைப்பு. இதன் முக்கிய சுலோகம் "அது லாபகரமானதா?" என்பது தான். ஆனால், ஒரு தாயிடம் இத்தகைய மனப்பான்மையை நாம் எதிர்பார்க்க வியலாது. இவ்விதமான தொழிலியல் பொருளாதார முறை கடைசியில் யுத்தத்திற்கு அடிகோலுகிறது. பொருளாதாரத்துறையில் குறித்தவொரு முறையை நாம் கடைப்பிடிக்கும்போது, சில பண்புகளும் நம்மிடம் அமைகின்றன. தொழிலியல் முறையினால் கொள்ளைக்காரர்கள் ஆக்கம் பெறுகின்றனர். அமெரிக்கா இத்தகைய முறையில்தான் இன்று போய்க்கொண்டிருக்கிறது. மேநாட்டு ஜனநாயகம் முழுதும், தொழிலியல் பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டது; ஜனங்களின் பொருளாதார நலனைக் கருதியது அல்ல. இதை நாம் அப்படியே கடைப்பிடிக்க முயன்றதன் விளைவுதான் கள்ள மார்க்கெட், லஞ்சம், கவைக்குதவாக் கட்டுப்பாடுகள் எல்லாம். தொழிலியல் நாகரிகம் நம் நாட்டிலும் காலூன்றுகிறது என்பதையே இது காட்டுகிறது.

எல்லோரும் மிலேச்சர்களே!

இந்திய நாகரிகம் "அது லாபகரமானதா?" என்னும் அடிப்படையைக் கொண்டதல்ல; சமூகத்தின் கட்டுக்கோப்பை வளர்ப்பதையே நோக்கமாய்க் கொண்டது. ஆனால் இன்று அது அலங்கோல நிலையில் காட்சியளிக்கிறது. இதை நாம் பார்ப்போம். பிறரை அண்டிச் சுரண்டி வாழ்வோன் மிலேச்சனென்றும், பிரவிருத்தியில் ஈடுபடுவோன் வைசியனென்றும், இனத்தைக் காப்பவன் க்ஷத்திரியனென்றும், பயன் கருதாமல் சேவை செய்வோன் பிராமணனென்றும் வைத்துக் கொண்டால், நம்மில் ஒருவராயினும் பிராமணரென்று மிஞ்சமாட்டோம். எல்லோரும் மிலேச்சர்களே. உண்மையான பிராமணர் இந்தியாவிலே இல்லை.

தியாகமா, போகமா?

அக்காலத்திய சமூக அமைப்பு சேவையைப் பிரதானமாய்க் கொண்டது; பொருள்களைச் சேகரித்து வைப்பதை நோக்கமாய்க் கொண்டிருக்க

வில்லை. செயற்கையான தேவைகளைச் சிருஷ்டித்து, அவற்றை ஒருவன் வாழ்க்கையில் எவ்வளவுதூரம் பூர்த்திசெய்கிறனென்று நிர்ணயிப்பது லோகாயத வாழ்க்கைநிலை. அதை வளர்த்துக் கொண்டே போவதால், அதில் ஜனநாயகத்தின் சாயையும் தோன்றத்தான் செய்யும். தகராறு உலக யுத்தங்களாய் மாறும்போது, இந்தச் சிக்கல்தான் அங்கு பிரதிபலிக்கிறது. இந்திய ஜனநாயகத்தின் சேவைநெறி யுத்தத்திற்கு அடிகோலுவதாய் இருத்தலாகாது. காந்தீயப் பொருளாதாரத் திட்டம், போகத்தை வற்புறுத்தாமல், தன்னடக்கம், ஒழுங்கு, சுய கட்டுப்பாடு பரநல சேவை ஆகியவற்றை வலியுறுத்துவதன் காரணம் இதுதான். ஒரு மனிதனை, பணத்திற்காக அல்லாமல், தியாகத்திற்கும், சேவைக்கும் அல்லது பிறர்பொருள் விழையாமைக்குமாகவே நாம் கௌரவிக்கிறோம். சேவையும் துறவும் வேறு, போகமும் தொழிலியல் முறையும் வேறு.

நமது பழய குடியரசு.

மேநாடுகளில், குவியல்முறை ஸ்தாபனங்கள் யாவும் சர்வாதிகாரத் தன்மையன. அவற்றின் ஜனநாயகத்தால் விளைந்த பயன் மந்தை வேலை முறையும் சர்வாதிகாரமுந்தான். பொருளாதார வாழ்க்கையமைப்பு பரவல் முறையில் அமைந்து, ஒவ்வொன்றும் பூர்த்தியான தனித்தனி அங்கமாய் விளங்குவதுதான் ஜனநாயகத்தின் சரியான அடிப்படையாகும். நம்கிராமவாசிகள், பண்டைக்காலத்தில், கிராமக் குடியரசுகளின் மூலம் தம்மைத் தாமே ஆட்சிசெய்து வந்தனர். அவர்கள் கடைப்பிடித்த கொள்கைகள் என்றென்றும் பொருந்தக்கூடியவை. அத்தகைய அடிப்படையில் எழுந்த இந்தியா, சுயநல போகத்தில் மூழ்கியிராமல், புலனடக்கத்திற்கு வழிசெய்வதாயிருக்கும். வெளிக் கட்டுப்பாட்டினால் மனிதத்திறன் சுருங்குகிறது. ஆதலால், ஜனநாயகத்தின் பிரதான அம்சமான ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு வெளிக்கட்டுப்பாட்டினால் மட்டும் இயலாதென்பதை உணரவேண்டும்.

தனி மனிதனின் சுதந்திரம்.

அமெரிக்காவிலிருப்பதைவிட ரஷ்யாவில் சுரண்டல் அதிகம். ரஷ்யாவில் மனிதனின் தனித்தன்மை வளர்வதற்கு இடமில்லை. நாள் முழுதும் அவன் சட்டத்திற்கு அடிமை; மனிதன் வெறும் உற்பத்திக்கான சாதனமாய்க் கருதப்பட்டு, சமூகத்தின் அடிமையென்றாகி விடுகிறான். அமெரிக்காவிலோ, ஒருவன் 8 மணிநேர வேலைக்கப்புறம் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். மனிதனின் தனித்தன்மையை நாம் உத்தரவாதம் செய்யாதவரை, ஜனநாயகத்தை அடையமுடியாது. இதனால், ஒருவன் தன் இஷ்டம்போல் எது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்பதல்ல; சமூக நியதிகளில் சிலவற்றை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்பது அவசியம். நம் வாழ்க்கை ஒழுங்கையும், சுயமான கட்டுப்பாட்டையும் கொண்டதாயிருக்கவேண்டும். வெளிக் கட்டுப்பாட்டை நாம் வளர்த்தால் மனிதனின் சுதந்திரமும், வளர்ச்சியும், தனித்தன்மையும், திறனும் நசிந்துவிடும்.

கிராமங்களில் சுரண்டல்

இந்தியாவில், இன்று, கிராமங்களில் தான் சுரண்டல் நடைபெறுகிறது; மில்களில் அல்ல. ஒரு வித்தை ஊன்றிப் பலநூறு வித்துக்களை உற்பத்தி செய்பவனே செல்வத்தின் சிருஷ்டிகர்த்தா. ஒருவகைச் செல்வத்தை மற்றொரு வகையாக மாற்றுவது உற்பத்தியாகாது. செல்வத்தை உற்பத்தி செய்வோன் இன்று வறுமையில் உழல்கிறான்; உடுப்பதற்கு உடையின்றி, எலும்புந்தோலுமாயிருக்கும் அவனைக் காணும்போது, எங்கோ ஒழுக்கு இருப்பது தெளிவாகிறது. திருடுவது யார்? எங்கிருக்கிறார்கள்?

பணப்பொருளாதார அமைப்பின் மூலம், தற்போது நாம்தான் அத்திருட்டைச் செய்கிறோம். விலையைக் குறைத்துக் கொடுப்பதுமட்டும் திருட்டல்ல. ஒரு கிண்ணம் பாலுக்கு நாம் எவ்வளவுதான் விலை கொடுத்தாலும், அதனால் பால்காரன் தன் குழந்தைக்கும் பசுவின் கன்றுக்கும் பாலில்லாமல் விற்றுவிடுகிறானதலால், அதுவும் சுரண்டலே. நாம் கொடுக்கும் அதிக விலை குழந்தைகளுக்குப் பால் கிடைக்காமல் பறித்துவிடுகிறது. இவ்விதமாக, பணப்பொருளாதார அமைப்பினால் பலரும் தம்மையறியாமலே திருடர்களாகின்றனர்.

கிராமவாசிகளிடமிருந்து நாம் உணவுப்பொருள்களை வாங்கும்போது, அவர்களிடமுள்ள ஜீவாதாரத்தையே நாம் வாங்கிவிடுகிறோம். ஆதலால், தேவைக்குப் போக உபரியா யுள்ளதைமட்டும் அவர்கள் விற்கும் விதத்தில் பொருளாதார அமைப்பை மாற்றவேண்டும்; அவர்களை சுயதேவைப்பூர்த்தி யுள்ளவர்களாகச் செய்யவேண்டும். சீரான விவசாயத்தினால்தான் இது சாத்தியமாகும். சீரான உணவு, உடை, போதுமான உறைவிடம் இவையெல்லாம் அவர்களுக்குக் கிட்டவேண்டும். இவ்வகையில் தங்கள் கிராமச் செல்வநிலையையும், பொது விஷயங்களையும் அவர்களே நிர்வகித்துக்கொள்வது அவசியம். இதற்கு பலநோக்கச் சங்கங்கள் பயன்படும். பண்டமாற்றுப் பொருளாதார அமைப்பால், கிராமவாசிகள் தங்கள் செல்வநிலையை அதிகரித்துக்கொள்ள ஏதுவாகும். அவர்களுக்குள்ள இயல்பான அறிவாற்றல் அழிந்துவிடவில்லை. வரி வசூல் இனங்களைப் பரவல் முறைப்படுத்துவதால், தங்களுக்கு வேண்டிய குளம் கிணறு வெட்டவும், மண் அரிப்பைத் தடுப்பதற்கான கரை முதலானவற்றை அமைக்கவும் அவர்களுக்கு ஊக்கமேற்படும்.

கிராம வேரிலிருந்து வளர்ந்த ஜனநாயகம்.

சமூகத்தில் தூரதிருஷ்டி பெற்றவர்களும், சமீபதிருஷ்டி யுடையோரும் உண்டு. சர்க்காரின் தலைமைப்பீடத்திலுள்ளோர், தூரதிருஷ்டி பெற்றவர்களா யிருப்பது அவசியம். சேவையே பிரதானமாய்க் கொண்ட நம் சமூக அமைப்பில், தமக்கென்று எவ்விதமான அபிலாஷையு மில்லாதவர்களையே நாம் தேர்ந்தெடுக்கவேண்டும். சமீபதிருஷ்டியுடையோர் (குறுகிய காலப் பயனைக் கருதுவோர்) பதவிக்கு வருவார்களானால், தங்கள் சுயநல வேட்டையை ஆரம்பித்துவிடுவர். எனவே, சுயதேவைப்பூர்த்தியுடன் தம்மைத் தாமே நிர்வகித்துக்கொள்ளும் உறுப்புக்களே நம் ஜனநாயகத்தின் அடிப்படையென்பது தெளிவாகிறது. முதலில் கிராமத்தின் விவகாரங்களை நிர்வகிக்க அனுமதித்தால், பின்பு தாலூகா, ஜில்லா, மாகாணம், நாடு முழுமையும் என்று கிராமவாசிகளே நிர்வாகம் செய்வர். தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியன கிராமங்களில் விளையும். ஒவ்வொருவரும் தமக்குத் தேவையானதை எடுத்துக்கொள்வர். ஒவ்வொரு மனிதனும் தன் ஆற்றலுக்குத்தக்கவாறு உழைப்பைத்தர, தேவைக்குத்தக்கவாறு அவனுக்குப் பொருள்கள் விநியோகிக்கப்படும். உபயோகத்திற்குச் சமமாக உற்பத்தி இருக்கவேண்டும். பாமரனுக்கும் பஞ்சாயத்தின் தலைவருக்கும் கிடைக்கும் ஊதியம் ஒன்றாகவேயிருக்கும்; பஞ்சாயத்தின் தலைவர் குடும்பஸ்தராயில்லாவிட்டால், அவருக்குக் கிடைப்பது குறைவாகவும் இருக்கும். இத்தகைய ஜனநாயகம் இதுவரை எங்கும் தோன்றியதில்லை.

யாரைத் தேர்ந்தெடுப்பது?

நம் ஜனநாயகத்தின் வலிமை எல்லோரிடையேயுமுள்ள ஒத்துழைப்பைப் பொறுத்தது. காங்கிரஸின் பெயரில் நிறுத்தினால் ஒரு லாந்தர்க் கம்பமும் தேர்தலில் வெற்றிபெறும் என்று சொல்

வதுண்டு. இது கூடாது. அதிகாரத்திற்கு வந்தவர் மிகச்சிறந்த அறிவாளியாயிருப்பினும், ஜனங்களைச் சரிவர ஆட்சிசெய்ய அவரால் இயலவில்லையென்றால் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிடவேண்டும். சாதாரண காலத்தில் சர்ச்சில் தோல்வியடையவில்லையா? ஜனங்கள் தாமாகச் சிந்தித்து முடிவு செய்யவேண்டும். தலைவர்கள் தங்கள் கௌரவத்தையும் ஒழுக்கத்தையும் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவர். இது, சிறிய தொகுதிகளாயிருந்தால்தான் சாத்தியம்; பெரும் பொறுப்பை வகிக்கும் தங்கள் தலைவர்களைப்பற்றி அப்போதுதான் ஜனங்கள் அறிந்து கொள்வர்.

ஒரு விவசாயி இந்தியாவின் பிரதம மந்திரியாய் ஆகும் போதுதான் அதன் ஜனநாயக லட்சியம் பூர்த்தியாகும். உண்மையான ஜனநாயகம் இல்லாமையால் இப்போது பற்பல நாடுகளும் சண்டையிட்டுக்கொள்கின்றன. அவற்றிலுள்ள கிராமவாசிகளிடையே பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஏற்படுமானால், இச் சர்வதேசத் தகராறுகள் தீர்ந்துவிடும்.

ஆச்சாரிய விநோபாஜி விவசாயத்தைப்பற்றி அதிகம் வற்புறுத்தியிருக்கிறார். நாம் இதுவரை கிராமக் கைத்தொழில்களையே வற்புறுத்தி வந்தோம்; ஆனால் விவசாயத்தின்மூலம் உழைப்பின் பெருமையை நிலைநாட்ட வேண்டிய அவசியம் இப்போது நேர்ந்துள்ளது.

அஹிம்சை ஜனநாயகம்.

மேநாட்டு ஜனநாயகம் தேவைகளைப் பெருக்குவதை அடிப்படையாகக் கொண்டது. தேவை பெருகப் பெருக, வாழ்க்கையின் தரமும் உயருகிறது. இதுதான்அவர்களது நோக்கம். நாம் இதையேதான் இங்கும் ஸ்தாபிப்பதா? பணத்தின் மதிப்பை உயர்த்தி, அதன் மீது நம் சமூக அமைப்பை நிர்மாணிப்பதா? நம் நாட்டின் பாரம்பரியம், வேறானது; கிராமப் பஞ்சாயத்து பரவல் முறையிலமைந்த அஹிம்சா ஜனநாயகமே யாகும். போகத்தையும் ஆடம்பரத்தையும் பிரதானமாய்க் கொண்ட ஜனநாயகம், ஹிம்சை பூர்வமானது. ஆனால், இந்தியாவின் சமூக அமைப்பு, பரவல் முறையையும் உழைப்பின் கௌரவத்தையும் கொண்டெழுந்தது. சுரண்டலும் வர்க்க பேதமும் அற்ற சரியான சமூக அமைப்பு இதுதான். நாமே உழைக்க விரும்பாவிட்டால், பிறரது உழைப்பினால் வாழவேண்டும்; அப்போது ஹிம்சைநெறி புகுந்துகொள்ளும்.

பண்ணை ஆசிரம ஆராய்ச்சி.

இந்த எண்ணத்தைக் கொண்டுதான் நான் வர்தாவுக்குப் பக்கத்திலுள்ள 'செல்டா' என்னும் கிராமத்தில் குடியேறி சில ஆராய்ச்சிகளைச் செய்ய உத்தேசித்திருக்கிறேன். விவசாயத்தை சுயதேவைப் பூர்த்தி யுடையதாய்ச் செய்து, தேவையான உணவு, உடை முதலியன அவ்வக் கிராமங்களிலேயே கிடைக்குமாறு செய்வதற்கான மார்க்கம் யாது என்பதை உணர்ந்து, அதைப் பிரத்தியட்சமாய், அனுபவ வாயிலாகத் தெளிவுபடுத்தவேண்டும். பணம் கிடைக்குமென்று பருத்தி, வேர்க்கடலை, சணல், புகையிலை முதலானவற்றைப் பயிரிடுவது சரியல்ல. சீரான வாழ்க்கைவசதி வேண்டுமானால், அதற்கு சீரான விவசாய முறையும் அவசியம். இக்காலத்தில் பணந்தான் உச்ச நிலையிலிருக்கிறது; பல துன்பங்களுக்கும் காரணம் இதுவே. அதிகவிலையென்றவுடன், முன் சொன்னபடி, பால்காரனுக்கு ஆசை பிறந்து, குழந்தைக்குங்கூடப் பாலில்லாமல் விற்றுவிடுகிறான்; குழந்தை நலிகிறது. பணம் என்ற அடிப்படையிலெழுந்த சமூக அமைப்பின் பயன் இதுதான். இத் துன்பங்கள் தீருவதற்கான வழி, நம் சமூக, பொருளாதார அமைப்பில் தீவிரமான மாறுதல்களைச் செய்வது ஒன்றே யாகும்.

நாளுக்கு நாள் உணவுப் பிரசினை வேறு கடுமையாகிக்கொண்டிருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கும் நாம் விவசாயத்தின் மீது அதிக கவனம் செலுத்துவது அவசியமாகிறது. மேற்சொன்ன இவ் வழிகளில் நீங்கள் ஏதாயினும் உருப்படியான வேலை செய்ய உத்தேசமென்றால் எனக்கு எழுதுங்கள். ஆனல், வாதப் பிரதிவாத ரசனைக்காக எழுதுவது கூடாது; ஏனெனில், இதுவரை நடைபெற்றுள்ள விவாதங்களே போதும். நேர்முகமாய் உழைப்பில் ஈடுபட வேண்டிய காலம் இது.

———o———

ராம நாமம்.

[ஆச்சாரிய விநோபா பாவே]

[சமீபத்தில் கதர் மலர்-ஸர்வோதய பிரசுராலயமும், கோமதி பிரசுர நிலையமும் சேர்ந்து வெளியிட்டுள்ள 'ராம நாமம்' என்ற நூலின் ஹிந்தி மூலப் பதிப்பை நுணுக்கமாக ஆராய்ந்து ஆச்சாரிய விநோபா பாவே ஹிந்தி 'ஸர்வோதய' பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். அதன் சாரமே கீழே தரப்படுவது.]

1. வெளி நோக்கு.

சிரஞ்சீவி இலக்கியம்.

பாபூ அவ்வப்பொழுது ராம நாமத்தைக்குறித்து வெளியிட்டுவந்த கருத்துக்களைச் சிறிய அளவில் ஸ்ரீ பரதன் குமரப்பா தொகுத்துத் தர, நவஜீவன் பிரசுர நிலையத்தார் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். இதில் பாபூவின் கட்டுரைகள் சிலவும், அவருடைய சொற்பொழிவுகள் சிலவும், சில கடிதங்களும் உள்ளன. அனுபந்தத்தில் பாபூவின் இறுதிக்காலத்தில் ராம நாமம் எவ்வாறு அவரை உள்ளும் புறமும் ஆகர்ஷித்திருந்தது என்பதை விளக்கும் ஒரு வரலாறும் இணைக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகம் சிறிய உருவில் எல்லாவற்றையும் தாங்கி நிற்கிறது. விரத அனுஷ்டானங்களை விவரிக்கும் பாபூவின் 'மங்கள் பிரபாத்' என்ற நூலைப் போன்று இது அமரத்துவம் பெற்று விளங்கக்கூடியதாகும். இதை இங்கே சிறிது ஆராய விரும்புகிறேன்.

* * *

உத்தரகாண்டம்.

இதில் நாற்பதுக்கதிகமான பகுதிகள் இருக்கின்றன. அவைகளில் பெரும்பாலானவை, இறுதி மூன்று வருஷங்கள், அதாவது கடைசிச் சிறைவாசத்திற்குப் பிந்திய காலத்தவை.

மொத்தத்தில் முக்கால் பகுதி கடைசி மூன்று வருஷங்களில் அருளப்பெற்றவை. பாபூவின் வாழ்க்கையில் இந்த இறுதி வருஷங்கள் மூன்றும் ஒரு சிறிய உத்தரகாண்டமாக அமைந்துள்ளது. ஆனல் பூர்வகாண்டம் முழுதிலும் சரி, உத்தரகாண்டத்திலும் சரி, ராம நாமத்தில் அவருக்கிருந்த பற்று ஒரே வகையில்தான் வெளியாகிறது. கருத்தில் வேறுபாடு எதுவும் காணப்படவில்லை; ஆயினும், உத்தரகாண்டத்தில் அழுத்தமும் ஆவேசமும் அதிகமாய் இருக்கிறது.

2. உள் ஆராய்ச்சி.

நாம நிரூபணத்தில் வேற்றுமைக்கு இடமில்லை.

பரம்பொருளின் நாம மகிமையை எல்லா மதங்களும் பாடியிருக்கின்றன. வாழ்க்கையைக் குறித்து ஒவ்வொரு மதமும் வெவ்வேறு நோக்கைக்கொண்டிருந்த போதிலும், இவ்விஷயத்தைக் குறித்து மட்டும் அவைகளின் நோக்கிலோ கருத்திலோ வேற்றுமை

எதுவும்காணப்படவில்லை. ஆண்டவனின் பல்வேறு குணங்களை ஒட்டிப் பல்வேறு பெயர்களைக் கற்பனை செய்துகொண்டு, எல்லோரும் தம் தம் ருசியையும் தேவையையும் அனுசரித்து, ஒவ்வொரு பெயரையோ, எல்லாப் பெயர்களையும் சேர்த்தோ, ஜபிக்கும் வழக்கம் எல்லா மதங்களிலும் இருந்துவருகிறது. உலகில் தோன்றியுள்ள மகான்கள் அனைவரும் தம் அனுபவத்தினால் இதை வலியுறுத்தியிருக்கிறார்கள். சகுணம், நிர்குணம், (உருவம், அருவம்) என்ற வேற்றுமையும் இங்கு அற்றுவிட்டது. நானக்கின் 'ஜபுஜி'யும் ஞானதேவருடைய 'ஹரி பாட'மும் இருவேறு சமயங்களுடையவை யாயிருந்தபோதிலும், நாம மகிமையை நிலைநாட்டும் விஷயத்தில் இவற்றிடையே வேற்றுமை எதுவும் இல்லை. பாகவதம் பகவானுடைய மங்கள நாமத்தைப் பாட, குரான் அல்லாவின் 'அஸ்மா உல் ஹுஸ்னு' வைத் துதிக்கிறது. ஒன்று ஸம்ஸ்கிருதமும் மற்றது அராபி பாஷையும் ஆகும் என்பதே இவற்றிலுள்ள வித்தியாசம்.

பாரத தேசத்தில் நாம ரசத்தின் வளப்பம்.

பாரத நாட்டில் வழங்கும் பாஷை ஒவ்வொன்றிலும் நாம ரசம் ததும்பும் இலக்கியம் மலிந்திருக்கிறது. இந்தச் சிறப்பில் எந்த பாஷையும் வேறு எந்த பாஷைக்கும் குறைந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. துளசிதாசர், சைதன்யர், துகாராம், நரசிம்மமேத்தா, நம்மாழ்வார் ஆகியோர் வெவ்வேறு பாஷைகளில் எழுதியிருந்தபோதிலும், ஒருவர் கூறியதையே மற்றவர் மொழி பெயர்த்தது போன்று தோன்றுகிறது. துளசிதாசருடைய ராமாயணத்திலோ, ராமனைவிட நாமம் சிறந்தது என்று கூறப்பட்டிருப்பதோடு, இரண்டையும் ஒப்பிடும் ஒரு மிகவும் இனிய நாம மகிமையை அவர் புனைந்திருக்கிறார். காந்திஜி அங்கிருந்து பெற்ற உணர்ச்சியைத் தம் அனுபவத்தின் மூலமாக நம்முன் விரித்து உரைத்திருக்கிறார்.

வேதங்களில் நாம மகிமை.

நாம மகிமையை விளக்கும் முதல் பாசுரம் நமக்கு வேதத்தில் கிடைக்கிறது. ரிக் வேதத்தில் நாமம் என்ற சொல் நூற்றுக்கணக்கான தடவை வந்திருந்தபோதிலும், வேதங்கள் அனைத்தின் சாரமும் பரம்பொருளின் நாமமே என்று உபநிடதங்கள் யாவரும் அறிய வெளியிட்டிருக்கின்றன. 'ஸர்வே வேதா யத் பதம் ஆமநந்தி' (எல்லா வேதங்களும் ஆண்டவனின் பெயரையே ஓதுகின்றன.): இதிலிருந்தே வேதத்திற்கு 'ஆம் நாயம்' அதாவது பரம்பொருளின் பெயரை ஓதுபவை என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆமனன் என்ற சொல்லுக்கு, விஸ்தாரமாகத் திரும்பத் திரும்ப ஓதுதல் அல்லது ஜபித்தல் என்பது பொருள். இதே நம்பிக்கையை மகான்கள் உறுதிபெறச் செய்திருக்கிறார்கள். வைஷ்ணவ பக்தரான துகாராம் 'வேத அனந்த போலிலா அர்த்த இதுகாச்சி ஸாதிலா—விடோ வாசிசரன ஜாவேம் நிஜ நிஷ்டா நாமி காவேம்' (வேதங்கள் எத்தனையோ வகையில் விளக்கிக் கூறியிருந்தபோதிலும், அவையனைத்தின் சாரமும் விட்டலனிடம் சரண் புகுதலும் அவன் பெயரை பக்தியுடன் பாடுதலுமே.) அவருக்கு சமஸ்கிருதம் தெரியாதாயினும், வேதத்தின் சாரம் என்னவென்று விளங்கிவிட்டது. இது மட்டுமா? அவர் தன்னம்பிக்கையுடன், 'வேதாசாதோ அர்த்த அமாசி, ச டாவா — ஹோராணி வஹாவா பாரமாதா' (வேதத்தின் பொருளை நானே உணர்ந்தேன். மற்றவர்களெல்லாம் மூட்டைதான் சுமந்தார்கள்.) என்கிறார். வைஷ்ணவரான துகாராம் உணர்ந்த வேதசாரமே தமிழ்நாட்டில் தோன்றிய சைவச் சிரோமணியான ஞானசம்பந்தருக்கும் தெரிந்திருந்தது, "வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாத நாமம் நமச்சிவாயவே": இது பிறர் கூறியதைத் தாமும் கூறியதோ குருட்டு நம்பிக்கையால் கூறியதோ அல்ல. வேதங்களே தம்மைப்பற்றி 'ருசோ அக்ஷரே பரமே

வ்யோமன் யஸ்தது ந வேத கிம்ரிசா கரஷ்யதி' (வேதத்தின் எல்லா ரிக்குகளும், அதாவது எல்லா வேத மந்திரங்களும், ஒரே எழுத்தில் பரம்பொருள் என்ற ஒரே பெயரில் பொருத்தப்பட்டிருக்கின்றன.) அந்தப் பெயரோ உள்ளத்தின் பெருவெளியில் மறைந்திருக்கிறது. அதை அறியாதவன் வேத மந்திரங்களை ஓதுவதனால் என்ன பயன்? அந்த எழுத்து 'ஓம்' என்பதே. அதுவே எல்லாவற்றிலும் எங்கும் வியாபித்துள்ள 'ராம்' என்பதும் ஆகும்.

[தொடரும்.]

உடல் உழைப்பு.

ஸ்ரீ காகா கலேல்கர்.

வாழ்க்கைக்கு, உண்ண உணவும், உடுக்கத் துணியும் முக்கியத் தேவை; இருக்க வீடும் வேண்டும். இவை உழைக்காமல் கிடைக்கமாட்டா. உழைப்பதற்கு, உபகரணங்களும் கருவிகளும் வேண்டும். இந்த உபகரணங்களும் உழைப்பால்தான் பெற முடியும். வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் உழைத்துத் தொழில் செய்வதால்தான் உற்பத்தி செய்ய முடியும். யாரோ ஆங்கிலேயர் சொன்னது மிகச் சரியே. ***Labour is absolutely the charter by which we hold existence,***— வாழ வேண்டுமானால், உழைத்து வேலைசெய்யும் ஷரத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். உடல் உழைப்பு வாழ்க்கையின் அங்கமே *(Part.)*.

மனித புத்தி சாமர்த்தியமாக வேலை செய்தது; அவன் மற்றவர்களின் உழைப்பால் லாபமடைய விரும்பினான். கடவுள், "இது திருட்டு; இம்மாதிரி வாழ்க்கை சாபமுள்ளது!" என்றார். எல்லோரும் எல்லோருடைய நன்மைக்காக — வாழ்வுக்காக — உழைக்க வேண்டும். கடவுள் இந்தப் பரந்த உழைப்பு நோக்கத்திற்கு யக்ஞம் என்று பெயரிட்டார். மனிதனைச் சிருஷ்டித்த பொழுதே யக்ஞத்தையும் துவக்கினார், கடவுள். அவர் சொன்னார், "இந்த யக்ஞத்தின் உதவியால்தான் நீ வாழ முடியும், உயர முடியும்; இதில் தான் உன் நலன் இருக்கிறது. இந்த யக்ஞத்தை நீ விட்டுவிட்டால், உனது இவ்வுலக வாழ்க்கையும், பிற உலக வாழ்க்கையும் மூழ்கிவிடும்." மனிதன் உழைப்பைப் புறக்கணித்த அப்போதே, கடவுள் அவனுக்குப் பலவிதமான நோய்களை ஒட்டவைத்தார். விவசாயம், நூற்பு, நெசவு, தச்சுவேலை, தட்டார வேலை இவை முழுதும் ஒவ்வொருவருடைய சொத்தாகும்.

விவசாயம் செய்துதான் மனிதன் உணவை உண்ணலாம். உணவை உண்ணுவோன் மலஜலம் கழித்துத் தான் ஆகவேண்டும். மலஜலம் கழிப்பதால், காற்று, பூமி, தண்ணீர் எல்லாம் சீர்கெட்டுவிடுகிறது. ஆகையால் மலத்தைக் குழிவெட்டி மூடவேண்டும். இப்படிச் செய்வதால் நல்ல உரம் கிடைக்கிறது. உரம் விவசாயத்திற்கு உபயோகப்படுகிறது. உரத்திலிருந்து விவசாயம், விவசாயத்திலிருந்து உணவு, உணவு மூலம் உரம், இதுதான் இயற்கையின் ஒழுங்கு. வாழவும், ஆரோக்கியத்தைக் காப்பாற்றவும், உழைப்புத் தேவை. அதைக் கைவிடாதே; அதை வெறுக்காதே; சோம்பேறியாகாதே. இதுதான் புண்ணியமான வாழ்க்கையின் தர்மம்.

ஸர்வோதய ஊழியர்களிடையே விநோபாஜி. (4)

[8–4–51-ல் காலை ஸ்ரீ விநோபாஜி, அஸ்ஸாம், ஒரிஸா, வங்காளம் முதலிய மாகாண ஊழியர் களிடம் பேசியதன் சுருக்கம்.]

அஹிம்சா சேனாதிபதியின் முறை.

உங்களைச் சந்தித்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. வெளிப்பரிச்சயம் செய்து கொள்ளும் வழக்கம் என்னிடம் இல்லை யென்றாலும், உங்களில் பலரை எனக்கும் என்னை உங்களுக்கும் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். 1940-ல் தனி நபர் சத்தியாக்கிரகத்திற்குப் பின் என்னை ஜனங்கள் அறிய ஆரம்பித்தனர். பிறகும் நான் ஒருவரையும் அறிந்திருக்கவில்லை. வெகுநாள் இப்படியே இருந்து விட்டேன். பின்னர் ஜெயிலுக்குச் சென்றவுடன் என் முறையே மாறி விட்டது; ஒவ்வொருவரும் எனக்கு அறிமுகமாயினர். எந்த வேலையை எப் பொழுது செய்யவேண்டுமோ அதை அப்பொழுதே செய்துவிடுவது என் வழக்கம். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு ஊழியரை அறிமுகம் செய்து கொண்டு அதன் மூலம் நமது ஸர் வோதய வேலையை முன்னேற்றுவ தென்றால், அதற்குச் சுமார் 2500 ஊழி யர்களிடம் பரிச்சயம் ஏற்படவேண்டும்.

சேனையில் சேனாதிபதி கட்டளையிடு கிறார்; ஆனால் சேனையைச் சேர்ந்த எல்லா ஊழியர்களையும் அவருக்குத் தெரியாது. இங்கே கட்டளையே கிடை யாது. ஊழியர்களுக்கு உபதேசம் செய்யும் பிரசினைதான், இங்கு. ஆனால் இதற்கு நேரான பரிச்சயம் தேவை. ஒவ்வொருவரும் வெளிப்பரிச்சயமே செய்யமுடியும். எனினும், பெயரளவில் பரிச்சயம் செய்யாவிட்டாலும், இதயத் தின் மூலம் ஒருவரையொருவர் அறி முகப்படுத்திக் கொள்ளலாம். ஆகையால், நீங்கள் சங்கோசப் படாமல் கேள்விகள் கேட்கலாம்.

நான் மக்களிடம் அதிகப் பழக்கம் வைத்துக்கொள்ளவில்லை யென்பது உண்மையே. ஆனால் சங்கோசத்தால் தான் இப்படி இருந்தேன் என்பதில்லை. எனக்கு சங்கோசமே கிடையாது; எங்கு போனாலும் நான் இதே உருவில் தான் இருக்கிறேன். பிறகு சங்கோசம், யாரிடம், எப்படி ஏற்படும்? ஆனால் எனது பரிச்சயம், நேராகமட்டுமல் லாமல், இதயத்துடன்தான். இதயத்தின் மூலம் செய்துகொள்ளும் பரிச்சயத் தையே நான் அதிகமாய் விரும்பு கிறேன். இந்த அனுபவம் எனக்கு இந்த முறை ஜெயிலில் கிட்டியது. உற வினர்களுக்கு மட்டும் கடிதம் எழுத எனக்கு அனுமதி இருந்தது. நான் முதல் கடிதம் பாபுவின் பெயரில் எழுதி னேன். அது அவருக்கு அனுப்பப் படவில்லை. "ரத்த சம்பந்தத்தால் மட் டும் சகோதரன்-சகோதரி என்று சொல் லப்படுபவர்களே உண்மை சகோதர-சகோதரிகள் என்பதில்லை. மற்றவர் களும் எனக்கு சகோதர-சகோதரிகள்

மக்கள் தங்கள் கையால், உடலால், அவசியமான உழைப்பு வேலை செய் தால்தான் ஒருவரின் பாரம் இன்னொரு வரின் தலையில் விழாது. உலகத்தில் அதிகமான பாவம் குறையும், சத்திய யுகம் ஆரம்பமாகும்; மனிதருக்கிடை யில் வளர்ந்துவந்துள்ள உயர்வு-தாழ்வு மனப்பான்மை குறையும்; நோயும் ஒழியும். தங்களுக்காகவும், எல்லோருக் காகவும் உடல் உழைப்பு வேலையைச் செய்வதே பெரியதும், உயர்ந்ததும், சனாதனமானதும், பரந்ததுமான தர்ம மாகும்.

— "மங்கள் பிரபாத்" ஆகஸ்ட், 1951.

தான். அத்துடன், இங்கு, கடிதம் எழுதுவோரும் அதை வாங்குவோரும் இருவருமே கைதிகள்" என்று நான் சர்க்காருக்குக் கடிதம் எழுதினேன். "தங்கள் காரணமெல்லாம் சரிதான்; ஆனால், சட்டப்படி நாங்கள் மனிதனுக்கு மனிதன் எவ்வித வித்தியாசமும் காட்டமுடியாது" என்று, கீதையின் சாம்யயோகத்தின் அடிப்படையையே அடைந்து விட்டதுபோல, சர்க்கார் பதில் எழுதினர்கள்.

ஆனால், 3 வருஷம் ஜெயிலில் ஒருவருக்கும் கடிதம் எழுதாமலிருந்துங் கூட, ஜெயிலுக்கு வெளியில் வந்தபொழுது எல்லாப் பக்கமும் அன்பு நூறுமடங்கு அதிகரித்திருப்பதைக் கண்டோம். ஆகையால், நேரிடையான பழக்கந்தான் முக்கியம் என்று கருதமுடியாது.

நமது பாஷைகள்.

கேள்வி:- (ஒரிஸா நண்பர்):- தாங்கள் எப்பொழுது ஒரிஸாவுக்கு வரப்போகிறீர்கள்? அங்கூல் சம்மேளனத்திற்குக் கூட வரவில்லை. ஒரு தடவை ஒரிஸாவுக்கு வாருங்கள்.

பதில்:- (விநோபாஜி):- என்னைப் பொறுத்தவரை, நான்குதிசையும் எனக்கு ஒன்றே. எங்கும் தடையோ, தளையோ கிடையாது. தற்சமயம் மழைக் காலத்திற்குள் வர்தா செல்வதே முடிவு. அங்கு நடைபெறும் வேலையும் முன்னேறும், இடையிடையே வெளியேயும் செல்லலாம். அந்தச் சமயத்தில் ஒரிஸாவுக்கும் வருவேன். ஏதோ காரணத்தால் வர முடியாமல் போய்விட்டாலும், என்னை தூரத்திலிருப்பவனாக எண்ணக் கூடாது. மக்கள் தடை செய்துங்கூட நான் உங்கள் பாஷையைக் கற்றுக் கொண்டு, இலக்கியத்தையும் படித்தேன். இந்தியாவில் உள்ள எல்லா பாஷைகளும் சிறியவையே. அவற்றில் அதிக வித்தியாசமும் கிடையாது. இலக்கிய அறிவை வளர்ப்பதற்கல்ல, ஆனால் அன்பை வளர்க்கவே நான் ஒரிய பாஷையைக் கற்றுக் கொண்டேன். தெலுங்கும் கொஞ்சம் எனக்குத் தெரியும். மக்களுக்கு என்னிடம் ஒரு ஆத்ம நம்பிக்கை வளர்ந்து வருவதையும் நான் பார்க்கிறேன். உங்கள் பாஷையில் சில சீர்திருத்தங்களைக் குறிப்பிட்டேன். சிலவற்றை நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் எழுத்தில் அவைகளை அவசியம் செய்யவேண்டும். உங்கள் பாஷையில் கூட்டெழுத்துக்கள் எழுதுவதில் தான் எவ்வளவு கஷ்டம்! வங்காளியைவிடக் குறைந்த கஷ்டமல்ல. கூட்டெழுத்து சில இடங்களில் மேலே சேர்க்கப் படுகிறது; சில இடங்களில், கீழே, ஒரே எழுத்தே பல மாதிரியாய் எழுதப் படுகிறது. தெலுங்கிலும் சீர்திருத்தம் தேவை; ஆனால் ஒரியாவையும், வங்காளியையும் விடக் குறைவுதான்.

அஹிம்சா பாதுகாப்பு.

அஸ்ஸாம் சகோதரரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், ஸ்ரீ விநோபாஜி கூறினர்:

வடமேற்கு எல்லைப்புற மாகாணந்தான் எல்லை மாகாணம் என்று கருதிய ஒரு காலம் உண்டு. ஆனால், அஸ்ஸாம் மாகாணமும் இப்பொழுது எல்லை மாகாண மாகிவிட்டது. இந்த எல்லைகளில் இன்று பாதுகாப்புக்காக ஹிம்சை முறையில் முன் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. நாம் அஹிம்சையின் சின்னமாகி விட்டால், இந்த எல்லைகள் நட்பின் பிரசாரக் கருவி யாகிவிடும். ஹிம்சையின் அடையாளமாகவே இருந்து விட்டாலும், பாதுகாப்பு என்ற முறையில் பெரிய மகத்துவம் உண்டு. ஆகையால், எந்த நோக்குடனும் அஸ்ஸாம் மாகாணத்தை விட்டுவிட முடியாது.

ஸர்வ சேவா சங்கம்.

ஒவ்வொரு பிப்ரவரி 12-உ. ஸர்வோதய மேளாவில், ஒவ்வொருவரும் ஒரு சிட்டம் நூல் காணிக்கை கொடுக்கும்

திட்டப்படி, சுமார் 10,000 ஜனங்கள் காணிக்கை கொடுக்க முன் வந்து விட்டால், இவர்களைக்கொண்டு அஸ்ஸாமில் பெரிய வேலை செய்யலாம். நூல் கொடுப்போருடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டியது ஸர்வ சேவா சங்கத்தின் கடமை. இது சிறிய வருடைய வாயால் சொல்லப்பட்ட பெரிய விஷயமாக இருக்கலாம்; ஆனால் கடவுளின் விருப்பம். சிறிய உபகரணங்களால் பெரிய வேலை செய்வதென்றால் இப்படியே நாம் செய்யவும் முடியும். ஸர்வ சேவா சங்கம் சிறியது; எனினும், காந்திஜியின் ஸ்தானத்தில் ஒரு மூர்த்தியாக விளங்குகிறது. அதை நாம் ஏற்றுக் கொண்டு, அதன் சொற்படி நடந்தால் நமது வேலை முன்னேறும். உங்கள் வழியில் அது செல்லுமானால், உங்களுடைய குணத்தினால் அதன் வேலை நிறைவேறும்; உங்களிடம் குறையிருந்தால் அதற்கும் கஷ்டமேற்படும். அதன் போதனையை பத்துத் தடவை நிராகரித்தாலும் பதினோராவது தடவையும் அதைச் சொல்வது அதன் கடமையாகும். அதன் புத்திமதியை நீங்கள் ஏற்காவிட்டால் உங்களை அது குறை கூற முடியாது.

உங்களுடைய குண தோஷங்களை அறிந்து, உங்களுடன் இதய சம்பந்தம் வைத்திருக்கும் சங்கம் ஸர்வ சேவா சங்கம்.

———o———

வாலிபர்களுக்கு அழைப்பு.

ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார்.

கிராமத்தைச் சுரண்டும் நகரம்.

வெள்ளையர் வந்தது, இந்தியாவில் பரவியிருக்கும் செல்வத்தைச் சுரண்டுவதற்கு. பரவலான குளம் குட்டையிலிருந்து வயலுக்குத் தண்ணீர் இறைக்க நீங்கள் கையாளும் முறையையே ஆங்கிலேயர் இந்நாட்டுச் செல்வத்தை இறைக்கக் கையாண்டனர். குளத்து ஜலம் வந்து நிறையக்கூடிய வகையில், கரையோரமாக, பல குழிகள் வெட்டுகிறோம்; அதில் சேரும் ஜலத்தை, ஏற்றம் பறி முதலியவைகளால், நிலத்திற்குப் பாய்ச்சுகிறோம். வெள்ளையர்களும் இதேபோல், பம்பாய், கல்கத்தா, கராச்சி, மதராஸ் முதலிய பெரிய பட்டணங்களை ஏற்படுத்தினர். உத்தியோகஸ்தர் ஆட்சி முறையிலோ, முதலாளித்துவ முறையிலோ, நாட்டின் கிராமங்களில் பரவியிருந்த செல்வத்தை இப்பட்டணங்களில் சேகரித்து, அங்கிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பி வந்தார்கள். வெள்ளையர் இருந்தவரை, இப் பட்டணங்களில் நாட்டுச் செல்வம் குவிந்து வந்தது; அங்கிருந்து வெளிநாட்டுக்குப் போய்க்கொண்டிருந்ததால், பட்டணங்களின் நிலை ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்தது. வெள்ளையர் போய்விட்டனர். இப்போதும் கிராமச் செல்வம் பட்டணங்களில் வந்து குவிகிறது; ஆனால், அங்கிருந்து வெளிநாட்டுக்குப் போவதில்லை. இதன் பலனாக, பட்டணங்கள் செழித்தும் கிராமங்கள் அழிந்தும் வருகின்றன. எனவே, உங்கள் கிராமத்துச் செல்வம் டில்லி, பம்பாய் முதலிய பட்டணங்களுக்குப் போவதை நிறுத்தக்கூடிய வகையில், இன்று, நீங்கள் ஓர் புதிய புரட்சியில் ஈடுபட வேண்டும். அவ்விடத்துச் சரக்குகளைப் பரிபூரணமாக பகிஷ்கரித்து, தொப்பி நிஜார்க்காரர்களின் நிர்வாக முறையுடன் ஒத்துழையாமை நடத்த முடியும்போது தான் இது நிறைவேறும். வெள்ளையர்களைக் கப்பலேற்றினதுபோல், இந்தத் தொப்பி நிஜார்க்கார நிர்வாக முறையை டில்லிக்கு விரட்டாமல் உங்களுக்கு சுயராஜ்யம் கிடைக்காது, அதாவது, குடியாட்சி ஏற்படாது.

புதிய புரட்சி.

இவ்வேலையைச் செய்வது யார் என்பதே பிரசினை. தோழர்களே! இப்புதிய புரட்சியை நாங்கள் உங்களுக்காகச் செய்யமுடியாது. நாங்கள் ஒரு போர் நடத்தினேம்; அன்னிய ஆட்சிக்குப் பதிலாக சுதேசி ஆட்சியை எற்படுத்தினேம். நாங்கள் களைப்புற்றும் இருக்கிறேம். எங்களுக்குக் கிடைத்ததை இந்தக் கடைசிக் காலத்திலாவது அனுபவிக்க ஆசைப்படுவதே இயற்கை. இப்புதிய புரட்சிக்கான வலிமை எங்கே யிருக்கிறது? ஆற்றல் எங்கிருக்கிறது? அதுமட்டுமா? நாங்களும் பணக்காரர்களே. ஒருமுறை, சிறிய வீடு வாசல்களைப் பணயம் வைத்து ஆட்டம் ஆடினேம். எதோ கை ஓங்கிற்று; சிறிய வீடுகளுக்குப் பதிலாகப் பெரிய மாளிகைகள் கிடைத்தன. இந்நிலையில், எங்களை நம்பி நீங்கள் எவ்வளவு தூரம் செல்லமுடியும்? இப்போது கிராமத்து வாலிபர்கள் தயாராக வேண்டும்; சுதேசி ஆட்சிக்குப் பதிலாக சுயாட்சி எற்படுத்த, புதிய பகிஷ்காரமும், புதிய ஒத்துழையாமையும் நடத்தவேண்டும்.

மீண்டும் பகீரதப் பிரயத்தனம்.

பழய காலத்தில், இந்திய மக்களின் நன்மைக்காக, சகரன் கடுந் தவம் செய்து கங்கையை வரவழைத்தான். கங்கை இறங்கும் வேகத்தில் பாதாளத்திற்குப் போகாமல் இருக்கவேண்டி, நடுவழியில், பரமசிவன் கங்கையைத் தம் சடையில் தடுத்துக்கொண்டார். தம் சடையிலிருந்து, நேராக இந்திய பூமியில் திருப்பிவிடுவதற்குப் பதிலாக, பரமசிவன் கங்கையைத் தம் மாமனர் வீட்டிற்குக் கொண்டுபோய்விட்டதால், அநேக வருடங்கள் வரை, அங்கே, இமயமலையில் கங்கை சுற்றி வந்து கொண்டிருந்தது. கடைசியில் இந்திய மக்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து, கங்கையை இந்நாட்டின் பக்கம் கொண்டுவரவேண்டியதாயிற்று. அதே போல், நாட்டின் இன்னல்களைப் போக்க மகாத்மா காந்தி கடுந் தவம் செய்து இந்த பூமியில் சுயராஜ்யத்தை வரவழைத்தார். விவரமறியாத மக்களிடம் அகப்பட்டு இந்த சுயராஜ்யம் கொடுங்கோலாட்சி என்ற குட்டையில் விழக்கூடாது என்று, வழியிலுள்ள நாம், அதை நம் குல்லாய்களில் ஏற்றுக் கொண்டுபோய், பிறகு, நம் உற்ருர் உறவினர் வீட்டில் வைத்திருக்கிறேம். உங்கள் சுயராஜ்யம் இப்போது அந்த இடங்களில் சுற்றித் திரிகிறது. இனி, நீங்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து, இந்த சுயராஜ்யத்தை லட்சக்கணக்கான கிராமங்களின் கோடிக்கணக்கான குடிசைகளில் சேர்க்கவேண்டும். இதற்கு கிராமத்து வாலிபர்கள் தம் வாழ்வைத் தியாகம் செய்யவேண்டும்; பிறர் நன்மைக்குத் தம் உயிரை விடவும் தயாராகவேண்டும்.

காந்தீய வழிகள் மூன்று.

ஆனல் நீங்கள் அப்படிச் செய்யவில்லை. 50 வருஷங்களுக்குமுன் காங்கிரஸ் மிதவாதிகள் செய்ததை நீங்கள் செய்கிறீர்கள். அவர்கள் அயல் நாட்டுத் துணியால் ஆன வெள்ளையர் உடுப்பு அணிந்தார்கள்; ஆங்கிலேயர் மாதிரியே உண்பது, வசிப்பது, பேசுவது, வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது எல்லாம். ஆங்கிலேயரின் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் அடைவதே அவர்கள் ஆசை, எண்ணம் எல்லாம். இத்துடன், அவர்கள் ஆங்கிலேயரையும் குறை கூறி வந்தார்கள். நாட்டைச் சுரண்டுவதால் எற்படும் கஷ்டங்களுக்காக, வெள்ளையரைத் தூற்றியும் வந்தனர். அன்பர்களே! நம் நாட்டு மக்கள் ஆங்கிலேயரைத் திட்டிவந்த வரையில் இந்தியச் சிம்மாசனம் இங்கிலாந்திலிருந்து இம்மியளவும் அசையவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காந்திஜியின் அழைப்பைக் கேட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பள்ளி, கலாசாலை, கச்சேரி, கோர்ட்டு, அக்காலத்துக் கவுன்சில், மந்திரிசபை, வாழ்க்கையின் வருங்

காலம், வீடு வாசல் முதலானவற்றை விட்டு, உயிரையும் உடைமையையும் மதியாது, பகிஷ்காரம், ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் ஆகிய இயக்கத்தை ஆரம்பித்தபோதுதான் இச் சிம்மாசனம் அங்கிருந்து கிளம்பி டில்லிக்கு வந்து சேர்ந்தது. இதற்காக, அவர்கள் மறியல் செய்தனர்; தடியடி பட்டனர்; சிறை சென்றனர்; குண்டடி பட்டனர்; உற்றார் உறவினரின் வசைச் சொற்களையும் கேட்டனர். அவர்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஒடுங்கினர், இறந்தொழிந்தனர். அதற்குப் பிறகுதான் நீங்கள் இன்று பார்க்கும் சுதேசி ராஜ்யம் டில்லியில் ஏற்பட்டது. அதேபோல, இன்று கிராமத்து இளைஞர்கள், பட்டணத்துப் பணக்காரர்களால் தயார் செய்யப்பட்டதும் அவர்களைப் போல்வதுமான உடை அணிகிறார்கள்; உணவு, பானம், பேச்சு, பழக்கம், வீடு வாசல், மற்றும் சகல முறைகளிலும் அவர்களையே பின்பற்றுகிறார்கள். வாழ்க்கையில் ஆசையும், எண்ணமும் அவர்களது பழக்கவழக்கங்களைப் பின்பற்றும் பாதையிலேயே செல்கின்றன. இத்துடன், அவர்கள் சுரண்டுவதால் ஏற்படும் கஷ்டங்களுக்காக அவர்களைத் திட்டுவதும் இருக்கிறது. ஆனால், இம்மாதிரி வசைப் புராணம் படிப்பதால் உங்கள் சுயராஜ்யம் பட்டணத்துக் கோடீசுவரர்களிடமிருந்து உங்கள் குடிசைப் பக்கம் இம்மியளவும் நகராது என்பதை நன்கு அறியவேண்டும். மறுமுறையும் வாலிபர்கள் பள்ளி – கலாசாலைகளை விட்டு, கோர்ட்டு – கச்சேரிகளை விட்டு, இன்றைய சட்டசபை–மந்திரிசபையின் ஆசையை விட்டு, வாழ்வின் வருங்காலச் சிந்தனையை விட்டு, உயிரைக்கையிலேந்தி, காந்திஜியின் கடைசி மந்திரத்திற்குத் தம் வாழ்வைத் தியாகம் செய்து, பகிஷ்காரம், ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் ஆகிய இயக்கம் நடத்தினால்தான் கிராமக் குடிசைகளுக்கு சுயராஜ்யம் வரும். இதற்காக நீங்கள் ஒடுங்கவும், இறந்தொழியவும் சித்தமாக வேண்டும். ஏனெனில், உங்களை ஒடுக்கவும், அடக்கவும், கொடுமைப் படுத்தவும் இந்த சுதேசி, முதலாளித்துவ, உத்தியோகஸ்தர் ஆட்சிச் சக்திகள் வெளிநாட்டாரைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக எதிர்த்து நிற்கக் கூடும்.

வாலிபர்களே, புதிய புரட்சிக்கு முன் வாருங்கள்.

40 ஆண்டுகளுக்குமுன் நாட்டில் ஓர் புரட்சிகர நிலைமை ஏற்பட்டது. அப்போது, இந்தியா இங்கிலாந்தின் சுரண்டலிலிருந்து தப்புவதற்குத் துடித்துக் கொண்டிருந்தது. நாட்டு மக்கள் இந்நாட்டைக் காலவரையறையின்றி ஆபத்துக்குள்ளாக்கக் கூடிய பலாத்கார முறையைக் கடைப்பிடித்தனர். அதனால் நாடு சக்தியற்று அழிந்திருக்கும். ஆனால், சரியான சமயத்தில், நம் நாடு மகாத்மா காந்தியின் சொல்படி பகிஷ்காரம், ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் என்ற முறையில் தன்னை இச் சுரண்டலிலிருந்து காப்பாற்றிக் கொண்டது. இன்று அதேபோல மற்றொரு புரட்சிக்கான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்று நம் நாட்டுக் குடிசைகள் கோடீசுவரரின் பங்களாவின் சுரண்டலிலிருந்து தப்புவதற்குத் தவிக்கின்றன. நீங்கள் உடனடியாக விழித்தெழுந்து, காந்திஜியின் சத்தியாக்கிரகம் என்ற அஸ்திரத்தைக் கையாளாவிடின், ரஷ்யாவின் சமிக்ஞைப்படி, பலாத்கார முறைதான் நாட்டில் தலையெடுக்கும். பிறகு, ஒரு பக்கம் நம் நாடு ரஷ்யாவின் கைப் பொம்மையாகவும், மறுபக்கம் இந்த பலாத்காரமும் பிரதி பலாத்காரமும் என்ற அடிதடியில் சிக்கிச் சிதைந்து சக்தியற்றும் போகும். **இந்தக் கொடிய ஆபத்திலிருந்து இந்தியாவைக் காப்பாற்ற காந்திஜி, இறக்கும் தருவாயில், ஏழு லட்சம் வாலிபர்களை அழைத்தார். இந்தியாவின் லட்சக்கணக்கான கிராம வாலிபர்கள் இந்த அழைப்பை ஏற்பார்களா?**

* * *

கீதைப் பேருரைகள்.

ஆச்சாரிய விநோபா பாவே.

(சென்ற இதழ் 362-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்தியாயம் II, பகுதி 5;

மகாத்மாக்கள் தம் வாழ்க்கையின் மூலமாக இந்த விஷயத்தை நிரூபித்திருக்கிறார்கள். துகாராமினுடைய பக்தியைப் பார்த்து சிவாஜி மகாராஜனின் மனதில் அவரிடம் மிகுந்த மரியாதை தோன்றிவந்தது. ஒருசமயம் அவர் துகாராமின் வீட்டிற்குப் பல்லக்கை அனுப்பிவைத்து அவரை வரவேற்பதற்கு ஏற்பாடுசெய்தார். ஆனால், துகாராமுக்கு, தம்மை வரவேற்பதற்கு நடக்கும் இந்த ஏற்பாட்டைப் பார்த்து, மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. அவர் தம் மனதிற்குள், "என் பக்தியின் பயனா இது? இதற்காகவா நான் பக்தி செய்கிறேன்" என்று கேட்டுக்கொண்டார். ஆண்டவன், மரியாதை கௌரவம் என்ற இந்தப்பயனைத் தமக்களித்து, தம்மைத் தன்னிடமிருந்து விலக்கித் தள்ளுவதாக அவருக்குத் தோன்றிற்று. அவர் கூறியதாவது,

"ஜான்தே ஹுயே அந்தர்,
டாலோகே மேரி ஜஞ்ஜட்?
யஹ் ஐப் தேரீ ஹை,
பாண்டுரங்க பஹுத் கோடி!"

ஆண்டவனே உமது இந்தப் பழக்கம் நல்ல பழக்கமல்ல நீர் எனக்கு இந்தக் குன்றிமணிகளைக் கொடுத்து ஏமாற்ற விரும்புகிறீர். 'இந்தத் தொந்தரவை விலக்கித் தொலைப்போமே' என்று நீர் மனதுள் எண்ணிக்கொண்டிருக்கிறீர் போலும்! எனக்குச் சொல்லிக்கொடுத்த ஆசிரியர் முட்டாளல்ல. நான் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிடுவேன். பக்தி செய்வதே பக்தனுக்குரிய தர்மமாகும். பக்தியில் பயன் என்ற சம்பந்தமில்லாத முட்கள் தோன்றாமல் தடுப்பதே அவனுடைய வாழ்க்கைக் கலை.

புண்டலீகனுடைய சரித்திரம், பயன் விழையாமை என்ற தத்துவத்தை இதை விடச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகிறது. புண்டலீகன் தன் பெற்றோருக்குச் சேவை செய்துகொண்டிருந்தான். அவன் செய்யும் சேவையைக் கண்டு மகிழ்ந்து, பாண்டுரங்கன் அவனைக்காணும்பொருட்டு ஓடோடியும் வந்தார். ஆனால் புண்டலீகனோ, பாண்டுரங்கனுடைய வலையில் சிக்கித் தான் செய்யும் சேவையை விட மறுத்துவிட்டான்; தன் பெற்றோருக்குச் செய்யும் இந்த சேவையையே அவன் மன ஒருமையுடன் கடவுளைக் குறித்துச் செய்யும் பக்தி என்று கருதினான். ஒரு பையன் பிறரிடம் திருடிக்கொணர்ந்து தன் பெற்றோருக்கு உதவி செய்வதோ, ஒரு தேச பக்தன் பிற நாட்டிற்குத் துரோகம் செய்து தன் நாட்டின் முன்னேற்றத்தை விரும்புவதோ பக்தி எனப்படமாட்டாது; அது பற்று அல்லது பாசமே. புண்டலீகன் இத்தகைய பாசத்தில் சிக்கவில்லை. அவன், பரமாத்மா இந்த உருவில் என் எதிரில் வந்து நிற்கிறாரே அவர் இப்படி இருப்பதோடு சரியா? அவருடைய இந்த உருவம் தோன்றியதற்குமுன் சிருஷ்டி உயிரற்று கிடந்தது?" என்று எண்ணினான். அவன் ஆண்டவனிடம் சொன்னதாவது:

"ஆண்டவனே, நீங்களே எனக்குத் தரிசனம் அளிக்க வந்திருக்கிறீர்கள். ஆனால் நானோ, 'உம் கொள்கை'யை ஒப்புக்கொள்வோன். நீங்கள் ஒருவரே

பகவான் என்று நான் கருதவில்லை. எனக்கோ, உங்களோடுகூட, இந்த என் பெற்றோரும் பகவானே. இவர்களின் சேவையில் ஈடுபட்டிருப்பதால் என்னால் உங்களை கவனிக்க இயலவில்லை. என்னை மன்னிக்கவேண்டும்." இவ்வாறு சொல்லிவிட்டு, அவன் பகவான் நிற்பதற்காக ஒரு செங்கல்லை நகர்த்திய பின் தன் பெற்றோரின் சேவையில் ஆழ்ந்துபோனான். துகாராம் இந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு மிகவும் விநோதமாகவும் மகிழ்ச்சியுடனும்,

"கைஸா தாரே பாகல் பிரேமி,
கடா ரக்கா ஜோ விட்டல்கோ!
ஐஸா கைஸா டீட் ஸாகலி,
ஈண்ட் பிச்சாயி விட்டல்கோ !!"

(அன்பா, என்ன பித்தடா இது? விட்டலனை நீ நிறுத்தி வைத்தாயே! உனக்கு என்ன துணிவு, என்ன திமிர்! விட்டலன் நிற்கக் கல்லைக் காட்டினாயே.)

புண்டலீகன் அந்த 'உம் கொள்கை'யை உபயோகித்தானே, அது பயன் விழையாமை என்ற யுக்தியின் ஒரு பகுதியேயாகும். பயன் விழையாத வனுடைய கருமமே கண்ணாயிருக்கும் குணம் எவ்வளவு ஆழ்ந்த தன்மையதோ, அவ்வளவு அவனுடைய போக்கு பரந்ததாயும், தாராளமாயும், சமமாயும் இருக்கும். இதனால், அவன் பல்வேறு தத்துவக்ஞானங்களின் சிக்கலில் மாட்டிக்கொள்வதில்லை; தான் ஏற்றுள்ள கொள்கையை விடுவதுமில்லை. (நான்யதஸ்தீதி வாதின:) 'இதுவே உள்ளது, வேறெதுவும் அறவே இல்லை' என்ற வாதத்தை அவன் உண்டாக்குவதில்லை. 'இதுவும் உண்மையே; அதுவும் உண்மையே; ஆனால் எனக்கோ, இதுதான் உண்மை' என்பதே அவனுடைய பணிவும் உறுதியும் பொருந்திய போக்காகும். ஒரு சமயம் ஒரு குடும்பி ஒரு துறவியிடம் போய், "மோக்ஷம் பெறுவதற்கு வீடு வாசலைவிட்டு வெளியேறுதல் அவசியமா?" என்று கேட்டான். அதற்குத் துறவி, "இல்லை, ஜனகர் முதலியோர் அரண்மனையில் இருந்துகொண்டே மோக்ஷம் அடைந்திருக்கும்பொழுது நீ வீட்டை விடுவானேன்?" என்று பதில் சொன்னார். பிறகு வேறொரு மனிதன் வந்து துறவியிடம், "ஸ்வாமிகளே, வீடு வாசலைத் துறக்காமலே மோக்ஷம் அடைய முடியுமா?" என்று கேட்டான். அதற்குத் துறவி, "யார் சொன்னது? வீட்டில் இருந்தபடியே எளிதாய் மோக்ஷம் கிடைப்பதாய் இருந்தால், சுகரைப்போன்றவர்கள் வீடு வாசல் அனைத்தையும் விட்டார்களே, அவர்கள் முட்டாள்களா?" என்று கேட்டார். பிறகு அந்த இரு மனிதர்களும் ஒருவரையொருவர் சந்திக்கவே, அவர்களுக்குள் பெரிய சண்டை மூண்டுவிட்டது. ஒருவன், "துறவி வீடு வாசலை விடும்படிச் சொன்னார்" என்றான். மற்றவனோ, "வீடு வாசலைத் துறக்கவேண்டிய அவசியமே இல்லை என்றுதான் சொன்னார்" என்றான். அப்பொழுது இருவரும் துறவியிடம் வந்தார்கள். துறவியோ, "இருவர் சொல்வதும் சரியே. ஒருவனுடைய மனப்போக்கு எப்படியிருக்கிறதோ அப்படியேதான் அவன் போகவேண்டிய வழியும் இருக்கும். ஒருவன் எப்படிக் கேள்வி கேட்கிறானோ அப்படியேதான் அவனுக்குப் பதில் கிடைக்கும். வீட்டை விடுவது அவசியம் என்பதும் உண்மை, வீட்டை விடத் தேவையில்லை என்பதும் உண்மையே" என்று சொன்னார். இதற்குத்தான் 'உம் கொள்கை' என்று பெயர்.

புண்டலீகனுடைய உதாரணத்திலிருந்து பயனைத் துறத்தல் அல்லது விழையாமை நம்மை எவ்வளவு தொலைவுக்கு அழைத்துக்கொண்டு போகும் என்பதை அறிகிறோம். துகாராமுக்கு பகவான் காட்டவிருந்த ஆசையைக் காட்டிலும் புண்டலீகனுக்குக் காட்டிய ஆசை அதிக போதையுள்ளது. ஆனால் அவன் அதிலும் மயங்கவில்லை. மயங்கியிருப்பானானால் அதிலேயே

சிக்கிக்கொண்டிருப்பான். ஆகையால், ஒரு முறை கருவியை நிர்ணயித்துக் கொண்டானபிறகு இறுதிவரையில் அதைக்கொண்டு காரியம் செய்து கொண்டே இருக்கவேண்டும். இடையில் கடவுளின் தரிசனத்தைப்போன்ற தடையே குறுக்கிட்டாலும் அதற்காகத் தான் ஏற்றுள்ள கருவி அல்லது மார்க்கத்தை விடவேண்டிய அவசியமே ஏற்படக்கூடாது. உடல் தப்பியிருக்கிறது என்றால், அது ஏற்ற வழியில் நடக்கும்பொருட்டே யாகும். கடவுளைக் காணுதல்தான் கையிலிருக்கிறதே; அவன் எங்கே போகப் போகிறான்?

"ஸர்வாத்மா—பாவ மோரா;
ஹாம் கௌன் சீன் லே அப்;
தேரீ ஹி பக்தி மேம்
மன் மோரா ரங்கா ஹுவா ஜப்?"

(எல்லா இடங்களிலும் ஆண்டவன் இருக்கிறான் என்பது என் நம்பிக்கை. உன் பக்தியிலேயே என் மனம் தோய்ந்திருக்கையில், உன்னை யார் என்னிடமிருந்து பறித்துக்கொண்டு போய் விடுவார்கள்?)

இந்த பக்தியைப் பெறுவதற்காகவே நமக்கு இந்த ஜன்மம் கிடைத்திருக்கிறது. 'மாதே சங்கோஸ்து அகர்மணி' என்ற இந்த கீதையின் வாக்குக்கு, 'பயன் கருதாது பணிபுரிந்துகொண்டிருக்கையில், செயலின்மை, அல்லது இறுதியான செயலிலிருந்து விடுதலை, அல்லது மோக்ஷ ஆசையையும் வைக்காதே' என்றவரையில் பொருள் ஏற்படுகிறது. வாசனையிலிருந்து பெறப்படும் விடுதலையே மோக்ஷம் என்பது. மோக்ஷத்திற்கும் வாசனைக்கும் சம்பந்தமேது? பயனைத் துறத்தல் அல்லது பயன் விழையாமை இவ்வளவு தூரம் போய்விடுமானால், வாழ்க்கைக் கலை பூரணத்துவம் பெற்றுவிட்டது என்று அறியலாம்.

* * *

வினோபாஜி யாத்திரை.

என். எஸ். ஸ்வாமிநாதன்,
A. I. S. A., காந்திநகர்.

ஏப்ரல் 14-ம் தேதி இரவு திருப்பூரிலிருந்து புறப்பட்டு, சென்னையில் ஒரு நாள் தங்கி, 17—4—'51-ல் காலை ஹைதராபாத் காதி பண்டாருக்குச் சென்றேன். அங்கிருந்து மாலை ஒரு மணிக்கு பஸ்ஸில் புறப்பட்டு நல்கொண்டாவுக்குப் போகும் வழியிலுள்ள பெட்டசிங்காரம் என்னும் கிராமத்தை 2-மணிக்கு அடைந்து, பூஜ்ய வினோபாஜி கோஷ்டியுடன் சேர்ந்துகொண்டேன். 1951 மே மாதம் 22-ந் தேதி கம்மாமத்திலிருந்து திரும்பி திருப்பூர் வந்து சேர்ந்தேன்.

தினம் காலை 3 மணிக்கு ஆச்சாரிய வினோபாஜி எழுந்துவிடுவார். சுமார் அரை மணி நேரம் தெலுங்கில் கவியாக்கப்பட்ட கீதையைப் படிப்பார். நாங்கள் 3-45 க்கு எழுந்து, காலைக் கடன்களை முடித்து, சாமான்களைக் கட்டி வண்டியில் ஏற்றத் தயாராக வைப்போம். 4-15 முதல் 4-45 வரை பிரார்த்தனை நடக்கும். பின்னர் பதினைந்து நிமிஷங்களில் சாமான்களை வண்டியில் ஏற்றி, ஒரு டம்ளர் மோரோ அல்லது தயிரோ வெல்லத்துடன் குடித்து விட்டு சரியாக 5 மணிக்கு, ஆச்சாரியாஜியுடன் புறப்பட்டுவிடுவோம். எங்கள் கோஷ்டியில் உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர்கள், பத்திரிகைப் பிரதிநிதிகள் முதலியோர் உட்படச் சுமார் 30 பேர் இருந்தார்கள். காலை 5 மணிக்கு கிராம மக்கள் பஜனை கோஷ்டியுடன் வினோபாஜியை அனுப்பி வைப்பதற்காகத் தயாராக வந்து காத்திருப்பார்கள்.

ஆச்சாரியாஜி 5 மணிக்குக் கிளம்பிய வுடன், மக்களும் "ராமம் பஜே ரகு ராமம் பஜே, மன ராமுடு ஒஸ்துன்னுரு, ராமம் பஜே" என்ற பாட்டைப் பாடிக்கொண்டு பின் தொடருவர். விநோபாஜி வெகு வேக மாக நடப்பார். நாங்கள் சில சமயங் களில் ஓட வேண்டியிருக்கும். கிராம எல்லை தாண்டியதும், ஜனங்களை நோக்கி, "மீரு அந்தருகி நமஸ்காரமு" என்று தெலுங்கில் சொல்லி விடை கொடுத்தனுப்புவார். தாயைப் பிரிந்த கன்றுபோல் பிரியா வதனத்துடன் திரும்பிச் செல்வர். ஒரு இடத்தில் 10 வயது ஹரிஜனச் சிறுமி ஒருவள் எங்களுடன் 15 மைல் நடந்து வந்தாள். கஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் பலபேர் எங்கள் கோஷ்டியில் சேர விரும்பினர். ஆனல், கிராம மக்களுக்கு இதனல் அசௌகரிய மேற்படும் என்ற காரணத்தால், சேர்த்துக்கொள்ளவில்லை.

நான் நடந்தது சுமார் 250 மைல் இருக்கலாம். சில நாட்கள் வேலையை முன்னிட்டு மோட்டாரில் சென்றேன். முதல் ஒரு வாரத்திற்கு காலில் மிகவும் வலி யேற்பட்டது; பின்னர் சரியாகி விட்டது. தினமும் 10 மைலுக்குக் குறைவாக நடை இராது—சில இடங் களில் தவிர. 6-30 மணிக்கு ஒரு இடத் தில் விநோபாஜி 5 நிமிஷம் தங்குவார். அப்பொழுது சிறிது பால் அருந்துவார். அவர் ஆகாரம் ஒன்றும் சாப்பிடுவதில்லை. தயிரில் வெல்லத்தைக் கரைத்து அருந்துவார்; சிறிது பழரசம் எடுத்துக் கொள்வார்; வேறென்றுமில்லை. 8 மணி வரைக்கும் அடுத்த முகாம் வர வில்லையானல், அப்பொழுது, ஒரு இடத்தில் 15 நிமிஷம் பால் அருந்து வதற்கென்று தங்குவார். அவரை வர வேற்க மக்கள் கிராமத்திலிருந்து இரண்டு மைல் வரைக்கும் முன்னல் வந்து காத்திருப்பது வழக்கம். அவரை தூரத்திலிருந்து பார்த்ததும், மக்களின் பஜனையும் ஜெய கோஷமும் முழங்கும். ஒரு தட்டில் விளக்குடன் குங்குமம், நூல் மாலை, பழம் கொண்டு வந்து கொடுப்பர். அதை வாங்கிக்கொண்டு உடனே கிளம்பி விடுவார். பழங்களை யும் பூமாலையையும் வழியில் தென்படும் சிறு குழந்தைகளுக்குக் கொடுத்து விடுவார். ஒரு கிராமத்தில் மட்டும் சிலருக்குக் குங்குமம் இட ஆரம்பித்தார். எல்லோருக்கும் பிறகு அவர் குங்குமம் இட நேர்ந்தது, கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. மக்கள் பஜனை செய்துகொண்டே அவர் தங்கும் வீடு வரை பின்தொடருவர். அன்றைய நிகழ்ச்சி நிரலை அவர்களுக்கு அறிவிப் பது வழக்கம்.

போசம்பள்ளி என்ற கிராமத்தில், 18—4—'51 அன்று, பிரார்த்தனையின் போது, ஹரிஜனங்கள், விவசாயத்திற் கும் வீடு கட்டுவதற்காகவும் 80 ஏக்கர் நிலம் அளிக்க சர்க்காருக்கு எடுத் துரைக்குமாறு அவரிடம் கேட்டனர். அதற்கு அவர், சர்க்காருக்குஎழுதி நிலம் கிடைக்க வெகு காலமாகும் என்றார். அப்பொழுது ராமச்சந்திர ரெட்டி என் பவர் தம் காலஞ்சென்ற தந்தையின் விருப்பப்படி 100 ஏக்கர் நிலம் அளிப்ப தாக வாக்களித்தார். உடனே அவரிடம் ஒரு நன்கொடைப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி, விநோபாஜியும் கையெழுத்திட்டார். அந்த ஊர் ஹரி ஜனங்கள் இருவர், ஸ்ரீ ராமச்சந்திர ரெட்டியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கொண்ட 'டிரஸ்டு' எப்பொழு தும் இயங்கிக்கொண்டிருக்கும். அந்த டிரஸ்டிகள் கூட்டுறவுப் பண்ணை முறை யில் ஹரிஜனங்கள் உழவு செய்வதற் கான ஏற்பாட்டைச் செய்வர்.

இதன் பின்னர் விநோபாஜிக்கு ஒரு யோசனை தோன்றியது. "ஏன் எல்லா இடங்களிலும் நிலமில்லாத ஏழை களுக்கு நிலம் வாங்கிக் கொடுக்கக் கூடாது?" உடனே இதை எல்லாக் கிராமங்களிலும் அமுலுக்குக் கொண்டு வந்தார். நல்கொண்டா, வாரங்கல் ஜில் லாக்களில் (தெலுங்கான), அவர் சமஸ் தானத்தைத் தாண்டும்வரை, 9000 ஏக்கர் நிலம் தானம் அளிக்கப்பட்டது. அவர்

சென்ற பின்னரும் 'பூமிதான இயக்கம்' நடந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீ கொண்டா வெங்கட ரெட்டி என்பவர் ஒரு லட்சம் ஏக்கர் நிலம் தானம் வாங்க ஏற்பாடு செய்து வருகிறார். வினோபாஜி யாத்திரை முடிந்து சென்ற பின்னர், சுமார் 3500 ஏக்கர் நிலம் கிடைத்துள்ளது. ஒரு ஆளுக்கு ஒரு ஏக்கர் வீதம் அநேகருக்கு வேலை கிடைத்துவிட்டதாக வினோபாஜி சொன்னார். இந்த நிலங்களைச் சரிவரப் பங்கிட்டுக் கொடுக்க ஓர் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இக்கமிட்டியின் மெம்பர்கள்: ஸ்ரீ கேசவ் ராவ், தலைவர், நல்கொண்டா ஜில்லா காங்கிரஸ் கமிட்டி; ஸ்ரீ கோதண்டராம ரெட்டி, காரியதரிசி, போங்கிர் தாலூகா காங்கிரஸ் கமிட்டி; ஸ்ரீ மகாலக்ஷ்மி அம்மாள், அங்கத்தினர், ஹைதராபாத் மாகாண காங்கிரஸ் காரியக் கமிட்டி; இம் மூவரும் எங்கள் கோஷ்டியில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலையில் வினோபாஜி வந்ததும் அவரை ஒரு ஆசனத்தில் இருத்தி, கை கால்களை அலம்பி விடுவர். பல இடங்களில் 'புருஷ சூக்தம்' முதலிய வேத மந்திரங்களை மிகவும் நன்றாய்க் கோஷித்ததை வினோபாஜி பெரிதும் லயித்துக் கேட்டார். பின்னர் நிலம் விஷயமாக பேரம் நடக்கும்.

நாங்கள் ஸ்நானம் முதலியன செய்து, 10 அல்லது 10-30க்குச் சாப்பிடுவோம். சிறிது நேரம் இளைப்பாறிய பிறகு, தங்கள் தங்கள் வேலையில் ஈடுபடுவோம். பகல் 2 முதல் 2-30வரை நூற்பு யக்ஞம். மாலை 3 முதல் 5, 5-30 வரை பக்கீரின் தர்பார் நடக்கும். பல குறைகளை மக்கள் விண்ணப்பமாகக் கொடுப்பர். காங்கிரஸ்காரர், போலீஸார், ஜமீன்தார்கள், கம்யூனிஸ்டுகள் முதலியவர்கள் மேலும், சொந்த மனஸ்தாபம் காரணமாகச் சிலர் பேரிலும் அந்த விண்ணப்பங்கள் இருக்கும். நிலம் முதலிய தங்கள் குறையும் அதில் காணப்பட்டன.

பஞ்சாயத்துக் கோர்ட்டு மாதிரி இருக்கும், அவர் தர்பார். தாசில்தார், கலெக்டர் முதலிய அதிகாரிகளையும் வைத்து, அவர்கள் மூலம் தீர்க்க வேண்டிய குறைகளை அங்கேயே தீர்த்துவிடுவார். சிலவற்றை சம்பந்தப்பட்ட சர்க்கார் அதிகாரிகளுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு கிராமத்தில் பெண் ஒருவளின் வீட்டை போலீஸ்காரர்கள் முகாமுக்காக பலவந்தமாய்ப் பிடுங்கிக் கொண்டனர். வினோபாஜி அறிவித்த மூன்று நான்கு நாட்களில் அதைத் திருப்பி அந்தப் பெண்ணுக்குக் கொடுத்து விட்டதாக நல்கொண்டா ஜில்லா சூப்பிரண்டு அறிவித்தார்.

வினோபாஜி எல்லோருக்கும் பேட்டியளித்து, அவரவர் குறைகளை தைரியமாய்ச் சொல்லச் சொல்வார். சிலர் தயங்கினர், சிலர் சொன்னார்கள். மாலை 5-30 அல்லது 6-க்குப் பிரார்த்தனை நடைபெறும். முதலில் தெலுங்கு கீதை படிப்பார்; பின்னர் நமாஸ் முதலியன படித்து, பிரசங்கம் செய்வார். பிரசங்க விவரங்கள் எல்லாம் 'கதர் மலரில்' படிக்கலாம். பிரார்த்தனை முடிந்ததும் நன்றாகப் பாடுபவர்களைக் கூப்பிட்டு, பாட்டுக் கேட்பதில் லயித்துவிடுவார்.

ஆங்கிலம் படிப்பவர்களுக்காக புதிய மாதப் பத்திரிகை:-

THE KHADI WORLD அல்லது கதர் உலகம்.

தனிப்பிரதி: அணா 4. வருஷச் சந்தா ரூ. 3.

(388-ம் பக்கத் தொடர்ச்சி.)
யோசிப்பதற்கோ, எதையும் செய்வதற்கோ தேவையிராது. ஒவ்வொரு காரியத்தையும் ஒவ்வொரு விஷயத்துடன் பொருத்துவதெப்படி என்ற முயற்சியிலேயே அவர்கள் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருப்பார்கள். நாம் இதிலிருந்து விடுபடவேண்டும். நாம் இதை ஒரு வாழ்க்கைத் தத்துவமாக, சீரிய கருத்தாகக் கொண்டு வேலையில் முனையவேண்டும்.

விடுமுறைகளின் தொடர்.

இனி மற்றொரு விஷயம். நம் நாட்டின் நிலைமை நீங்கள் அனைவரும் அறிந்ததே. ஆனால் நமது தேசீய கீதம் சொல்வதென்ன?

'ஸுஜலாம் ஸுபலாம் மலயஜ சீதளாம்,
சஸ்ய ச்யாமளாம் மாதரம்'.
'நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்,
குளிர்பூந் தென்றலும், கொழும் பொழிற் பசுமை
வாய்ந்தான் திலகுவை, வாழிய அன்னை!'

இத்தகைய வளம் பொருந்திய தாய் நாட்டின் தற்கால நிலைமை எப்படியிருக்கிறது? அதை ஆளுவோர், அதன் தலைசிறந்த தலைவர்கள், இங்குள்ள மக்களின் உணவுக்கு எங்கே கேட்டால் பிச்சை கிடைக்கும் என்ற முயற்சியிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் இதற்காகவே பாடுபட்டு வருகிறார்கள். நம் நாட்டின் விசித்திர நிலைமையை என்னென்பது! ஜீவாதாரமான பொருளுக்கும் இங்கே வகையில்லாமல், நாம் பிறரிடம் யாசிப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோமே. இந்நிலையில், நம் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், நமக்கும் உள்ள பொறுப்பைப்பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். நான் சிந்தித்துப் பார்க்கையில் எனக்கு ஒரு விஷயம் மிகுந்த ஆச்சரியத்தைத் தருகிறது. அது என்னவென்றால், கடவுள் நமக்கு வருஷத்தில் 365 நாள் கொடுத்திருந்தும், நாம் 200 நாட்களில்கூட வேலை செய்வதில்லை. எஞ்சிய நாட்களை யெல்லாம் நாம் விடுமுறையென்று சொல்லுகிறோம்!

அறிவைக்கொண்டு வாழ்வோரின் விசித்திரக் காட்சி.

சமீபத்தில் நம் மத்திய மாகாணத்தில் நடந்த ஒரு விநோதமான செய்தி. சர்க்கார், சர்வகலாசாலையாரிடம், "தயவுசெய்து நீங்கள் இன்னும் கொஞ்சம் அதிக வேலை செய்யுங்கள். நாடெங்கும் அதிக உழைப்புத் தேவையாயிருக்கின்ற இந்தச் சமயத்தில் கல்லூரி ஆசிரியர்களும் சிறிது அதிகமாக வேலை செய்யவேண்டாமா? வாரத்தில் 24 மணி நேரம் சொல்லிக்கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டனர். அதற்குப் பேராசிரியர்கள் "20 மணிக்குமேல் எங்களால் ஆகாது" என்று சொன்னார்கள். ஆகவே, 20 மணிக்கும் 24 மணிக்கும் சண்டை! இதில் நாம் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், 12 மாதமுள்ள வருஷம் ஏற்கெனவே 9 மாதமாகிவிட்டது. அதாவது, 3 மாதந்தான் தொடர்ந்தாற்போல் விடுமுறை யாயிற்றே. அந்த 3 மாதமும் ஒரு நிமிஷங்கூட வேலையென்ற பேச்சுக்கே இடமில்லை. இப்பொழுது, எஞ்சியுள்ள 9 மாதங்களின் விஷயத்திலேயே சர்க்கார் வாரத்திற்கு 24 மணி நேரமென்று சொல்ல, பேராசிரியர்கள் 20 என்று சொல்லுகிறார்கள். கடைத் தெருவில் நடக்கும் பேரங்களைப்போல், இதுவும் வேண்டாம் அதுவும் வேண்டாமென்று 22 மணி நேரத்திற்கு ஒத்துப்போவார்களோ என்னவோ. இது எவ்வளவு பரிதாபமாயிருக்கிறது!

(தொடரும்)

(A. I. S. A.,) ஸர்வோதய பிரசுராலயத்தின் மலிவான புதிய வெளியீடு,
"விநோபாஜியின் ஸர்வோதய யாத்திரையும் பூமிதான யக்ஞமும்." விலை அணா 2.

தமிழ்நாட்டு விபாகங்கள்.

திருநெல்வேலி விபாக்.

திருநெல்வேலி ஜில்லா விபாகிலுள்ள சிப்பிப்பாறை காதி வஸ்திராலயத்தில், சிப்பிப்பாறை கிராமத்திலும், அதன் சுற்றுப்புறங்களிலும் நூற்பு அதிகம் நடந்து வருகிறது. இப்பக்கத்திலுள்ள கிராமத்தாரெல்லாம், தாங்கள் நூற்றுத் தாமாகவே சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்வதனல் ஏற்படும் பொருளாதார நன்மையை நன்கு உணர்ந்து, நூற்று வருகிறார்கள். நமது புதிய திட்டப்படி, விபாகங்களாகப் பிரித்து, அவரவர் தேவையை அவரவர்களே பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென நிர்ணயம் செய்ததனல், பொதுவாக, அதிக நூல் உற்பத்தி இருந்தும் நெசவு அதற்குத் தக்கவாறு அதிகமில்லாமற் போய்விட்டது. நம் தொண்டர்களின் வாராந்திர கிராமப் பிரசாரத்தாலும், சிப்பிப்பாறையில் நடைபெற்ற ஷிபிரின் முக்கியத்தாலும் கிராம ஜனங்கள் கதரின் தத்துவத்தை நன்கு அறிந்துகொண்டார்கள். இதனல் உடனடியாக கிராமத்தார்கள் தாங்கள் நூற்ற சிட்டங்களைக் கொடுத்து கதராக மாற்ற முன்வந்த சமயத்தில், அவர்கள் கேட்கும் துணியைக் கொடுக்காவிட்டாலும், வேறு கதர்த் துணியும் கொடுக்க இயலாது போய்விட்டது. இதோடு, சுயதேவைக்காக பெருவாரியான சிட்டங்கள் நெய்து கொடுப்பதற்காகக் கொடுத்தார்கள். சென்ற ஆறு மாதத்தில் இந்த விபாக்கின்மூலம் 7429 சிட்டங்கள் சுமார் ரூ. 3015-க்கு கதர் நெசவுசெய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் மூன்று மாதங்கள் பிரசாரத்தில் போய்விட்டதால், பின் மூன்று மாதங்களில்தான் நெசவு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதனல் வியாபாரத்திற்கு கதருக்காக மாற்றிக் கொண்ட சிட்டங்கள் 1,27,172: கதர் பெறுமானம் ரூ. 30,185.

இந்த நிலைமையைப் போக்குவதற்காக கிராமங்களில் நூல் உற்பத்தி செய்யும் இடங்களிலேயே, குவியல் முறையை விட்டுப் பரவல் முறையில் தறிகள் போட்டு நெய்வதென ஏற்பாடு செய்யப்பட்டு, கீழேகண்ட இடங்களில் தறிகள், சிப்பிப்பாறையில் 12, கழுகுமலையில் 10, புளியங்குடியில் 5, சங்கரன் கோவிலில் 12 தற்சமயம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் நிலைமையை அனுசரித்து, அதற்குத் தகுந்தாற்போல், தறிகள் சேர்க்கப்படும். சிப்பிப்பாறையிலுள்ள கதாயி மண்டல்காரர்களும் நம் உதவியாளருடன் பெரு முயற்சிகள் செய்து, தறிகளைச் சேர்ப்பதும் கிராமங்களுக்குச் செல்வதும் மிகவும் போற்றத் தக்கது. சிப்பிப்பாறை கிராமத்தில், கிராமத்தாரின் சொந்த முயற்சியினலேயே 3 மூங்கில் ராட்டைகள் செய்யப்பட்டு, அதில் நூற்று வருகிறார்கள்.

கஸ்தூரிரெங்கபுரம் என்னும் கிராமமானது சிப்பிப்பாறையிலிருந்து 2½ மைல் தூரத்திலிருக்கிறது. இதில் உள்ளவர்கள் 450 அல்லது 500 ஜனங்கள். இந்தக் கிராமத்தில் 45 ராட்டைகள் சுற்றுகின்றன. தற்சமயம் புஞ்சை கரிசல் நிலங்களுக்கு உரம் அடிக்கும் சமயமானதால் 10 ராட்டைகள் நூற்காமலிருக்கின்றன. இந்தக் கிராமத்திலுள்ள ஆண்களில் பெரும்பான்மையோர் கதரணிவோர். பெண்களில் சிலரே கதர் உடுத்துபவர்கள். இந்தக் கிராமத்தில் தாங்கள் நூற்ற நூலைத் தாங்களே தறிகாரர்களிடம் கொடுத்து தங்களுக்கு வேண்டிய துணியை, நாம் கொடுக்கும் கூலியை விட அதிகம் கொடுத்து, நெய்து கொண்டிருக்கிறார்கள். இனி நமது வஸ்திராலயமே சுயதேவைக்கு வேண்டிய ரகங்களை நெசவு செய்துகொள்வதெனத் தெரிவிக்கிறார்கள்.

3 மாணவிகள், தங்கள் கல்வியைக் கற்றுக்கொண்டு, தறி நெசவுக்குரியதையும் கற்றுக்கொள்கிறார்கள். இங்கு மகன் சர்க்கா பயிற்சி முன்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மகன் ராட்டுகளில் நூற்கப்படுகிறது. இக்கிராமத்தார் கதர்ப் பொருளாதாரத் திட்டத்தை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சர்க்கா சங்கத் திட்டப்படி நடத்தி வருவது கிராம மக்களுக்கு மிகவும் நன்மையை ஏற்படுத்தும் என்று பரிபூரணமாக நம்புகிறார்கள். காந்திஜியின் வழியே சாலச் சிறந்த வழியெனச் சொல்லுகிறார்கள்.

இந்த விபாக்கில் கோவில்பட்டி வட்டகையில், அதாவது கோவில்பட்டி, காலங்கரைப்பட்டி, புதுப்பட்டி, கழுகுமலை, சிப்பிப்பாறை, சங்கரன் கோவில் முதலிய இடங்களில் நூற்பு அதிகமாக இருப்பதனால், இப்பக்கத்திலுள்ளவர்கள் தாங்கள் வாங்கிக்கொள்ளும் கதர் ஜவுளிக்குப் பூரா செல்மானச் சிட்டம் கொடுத்து வாங்கிக்கொள்கிறார்கள். சுயதேவை நெசவிற்கும் நூல் கொடுத்து வருகிறார்கள்.

திருநெல்வேலிப் பகுதியில் நூற்பு அதிகமில்லாததனால், இந்த நூல் விதியால் மிகவும் சிரமமிருப்பதாக நிர்வாகிகள் தெரிவித்தவண்ணம், முன்புள்ள நூல் விதியின் பிரகாரமே கதருக்கு நூல் வாங்கிவரப்படுகிறது.

கூலிக்காக நூற்போரிடம் அவர்கள் கொண்டுவரும் நூலில் அவர்களுக்குப் பஞ்சு நூற்புக் கருவிகள் கொடுத்தது போக, பாக்கிவரும் பணத்தில் பாதி முன்பணமாகப் பிடிக்கப்பட்டு வருகிறது. நூற்போர்களே தாங்கள் கதர் கட்டுவதின் அவசியத்தை உணர்ந்து அதிக டிபாசிட் கொடுக்கச் சம்மதிக்கிறார்கள். அவர்களே பத்திரிகையில் பிரசுரிக்கும்படி எழுதியிருக்கிறேன்.

பி. நம்மாழ்வார்,
சஞ்சாலக்.

சென்னை விபாக்.

சுயதேவை வஸ்திராலயம் ஆரம்பம்.

ஜுலை 1௳ முதல் புதிதாக சுயதேவை விற்பனைக் கிளை ஒன்று திறக்கப்பட்டது. விற்பனையுடன், நூற்போருடைய ராட்டைகளைப் பழுது பார்க்கவும், மூங்கில் ராட்டையில் பயிற்சி தரவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

சர்க்கா ஜயந்தி விழா.

சென்னையில் சர்க்கா ஜயந்தி கொண்டாடுவது சம்பந்தமாக திட்டம் வகுக்கவும், கொண்டாடவும் கடந்த 8-7-51ம், 15-7-51ம் சென்னை விபாகக் கதாயி மண்டல்களின் கூட்டங்கள் நடைபெற்றன. அவ்வமயம் ஒவ்வொரு கதாயி மண்டலின் பொறுப்பிலும் எல்லா மண்டல் பிரதிநிதிகளும் கூடி, பிரார்த்தனை, வேள்வி நூற்பு, சர்ச்சைகள் முதலியன நடத்த முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு அங்கத்தினரும் தினந்தோறும் விடாது நூற்கவும், காந்தி ஜயந்திக்குள் எவ்வளவு நூல் நூற்பது என்பது பற்றியும் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார். ஜயந்தியின் கடைசி நான்கு நாட்களை விமரிசையாகக் கொண்டாடுவதற்கு மண்டல்களின் மத்திய கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அந் நான்கு நாட்களில் தெரு சுத்தமும் (தோட்டிகளுடன் சேர்ந்து செய்தல்) ஒரு அங்கமாக இருக்கும். 11-7-51 முதல் வஸ்திராலயத்தில் காலை 9-00 முதல் 10-00 வரை ஜயந்தியை முன்னிட்டு பிரார்த்தனையும், வேள்வி (துப்பட்டா) நூற்பும் நடைபெற்று வருகிறது.

சுயதேவைக்காக சென்று வந்த கிராமம்.

அயன்புரத்திற்கு 16-7-'51ல் நூற்போர்களின் சென்ஸஸ் எடுக்கவும், சுயதேவை வேலைகள் செய்வதற்கும் போனோம். அங்கு சுமார் 50 ராட்டைகள் இருக்கின்றன. தற்சமயம் அவை பெரும்பாலும் ஓடுவதில்லை. அவர்களுக்குத் தேவையான பஞ்சு,

பட்டைப் பஞ்சு வாங்கிக்கொள்ள சென்னை கிளைக்கு பஸ்ஸில் வரவேண்டி யிருக்கிறது. நூற்பவர்கள் ஒவ்வொரு தடவையும் பஸ்ஸுக்குப் பணம் கொடுத்து வரமுடியாததினால் நூற்பு வேலை நின்று போய்விட்டது. அவர்களுக்கு வேண்டிய உதவியும், ஆலோசனையும் உதவி வந்தால் சுயதேவை நூற்பை அபிவிருத்தி செய்யலாம். மேலும், அங்கு இடவசதி யிருப்பதால் புதிதாக நெசவாளர்களை குடியேறச் செய்யலாம். இவ்விதம் அங்கு சுய தேவை வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தால், அவ்விடத்தை சுயதேவை ஸ்தலமாகச் செய்யமுடியும். அங்குள்ள நூற்பவர்களின் சென்ஸஸ் எடுக்க ஸ்தல அன்பரொருவரின் உதவி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்குள்ள நூற்பவர்களே பருத்தி உற்பத்தி செய்யவும், பஞ்சு உடைக்கவும், அவர்களை சுயதேவையாளர்களாக மாற்றவும் எண்ணி அவர்களிடையே நூற்போர் சங்கம் அமைத்து வேலை செய்ய ஆரம்பித்துள்ளோம்.

நகரத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள சுயதேவையாளர்களுடையவும், கதர் உடுத்துவோருடையவும் வீடுகளுக்கு ஞாயிறுதோறும் (சில நாட்களில் திங்கள் உட்பட) சென்று, அவர்களுடைய நூற்பைப் பரிசீலனை செய்து "அத்தாட்சிக் கார்டு" கள் சுமார் 75 வழங்கப் கப்பட்டன. மேலும், பரிசீலனைக்காக 110 பேரின் பெயர்கள் பதிவு செய்யப் பட்டன. பரிசீலனைக்குப் போகும்போது சுயதேவையாளர்களுக்காக பட்டைப் பஞ்சு, நூற்புக் கருவிகள் விற்பனைக்குக் கொண்டு போய் விநியோகிக்கப்பட்டன. அவர்களுடைய ராட்டைகளை அங்கேயே பழுது பார்த்தோம். கோட்டமுள்ள கதிர்களைச் சரி செய்து கொடுத்திருக்கிறோம். நூற்பிலும் தூல் வீசுவதிலும், கண்ணிகட்டுவதிலும் ஏற்படும் குறைகளைத் திருத்தி, சாஸ்திரீய முறையில் கற்றுத்தருகிறோம்.

அதிகமாக 'கதர் மலரும்' ஆங்கில 'கதர் உலகம்' (Khadi World) பத்திரிகையும் விற்றோம்.

1—7—51 முதல் பிரதிதினமும் பிற்பகல் 2-30 முதல் 3-30 வரை கதர் மலர், மற்றும் ஸர்வோதய வெளியீடுகள் முதலியன படித்தும், சர்ச்சைகள் செய்தும் வருகிறோம்.

ச. சுப்ரமண்யம்,
நிர்வாகி.

கோவை விபாக்.

கொடுவாயில் பயிற்சி முகாம்.

கோவை ஜில்லாவில், திருப்பூரிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள கொடுவாய் கிராமம் ஒரு முக்கிய கதர் உற்பத்தி ஸ்தலம். அதனருகிலுள்ள வஞ்சிப் பாளையம் என்னும் நூற்போர் கிராமத்தில், ஆகஸ்ட் மீ 20உ, தொண்டர்களுக்குப் பயிற்சி முகாம் ஆரம்பமாயிற்று. இது, ஸ்ரீ வி. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெறும். இந்தப் பயிற்சியின் நோக்கம், மாகாணம் முழுமைக்கும் கதர்க் கலையின் பல அம்சங்களிலும் தேர்ச்சி பெற்ற நிபுணர்களின் கோஷ்டி ஒன்றைத் தயாரிப்பது. மூங்கில் ராட்டை செய்தல், கதிர்க் கோட்டம் எடுத்தல், ராட்டைப் பழுது பார்த்தல், நெசவு, சாயம் போடுதல், கக்கூஸ் நிர்மாணம், சுகாதாரம், துப்புரவு வேலை முதலான பல வேலைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும், தனிப்பட்ட தொண்டரின் மனப்போக்கு, சக்தி, திறமை முதலியவற்றை அநுசரித்து அவரவருக்கு விசேஷப் பயிற்சி கொடுப்பது இந்த முகாமின் முக்கிய லட்சியம். இதில், தினமும், தொழில் சம்பந்தமான வேலைகளில் அதிகம் பயிற்சி யளிக்கப்படும். வகுப்புகளுக்கு நேரம் குறைவு. தொழில் திறமையைத் தொண்டர்களுக்கு அளிப்பதே இதன் முக்கிய கருத்து.

பயிற்சியில் தமிழ்நாட்டின் வெவ்வேறு விபாகங்களிலிருந்தும் 30 தொண்டர்கள் கலந்துகொள்கின்றனர். பயிற்சி முடிந்ததும், தம் தம் விபாகத்திற்குச் செல்வர். இவர்களின் உதவியை நாடும் கதாயி மண்டல் ஸ்தலங்களுக்கும் இதர இடங்களுக்கும், தனியாகவோ கோஷ்டியாகவோ, சென்று அவசியமான உதவியை இவர்கள் செய்வர்.

தஞ்சை விபாக்.

ஆகஸ்டு 15-ல் ஆடுதுறையில், பிள்ளையார் கோவில் தெருவில், கதர் உற்பத்தி வஸ்திராலய ஆரம்ப விழா நடைபெற்றது. டாக்டர் ஸ்ரீ. ஆர். மகாலிங்கம் தலைமை வகித்தார். ஜனாப் கே. எம். ஷரீப் கொடியேற்றினார். கதர் பக்தர் ஸ்ரீ ஜி. சிவசுப்பிரமணியம் காந்திஜியின் படத்தைத் திறந்துவைத்தார். ஸ்ரீமதி ஹிந்துமதி பெஹறன் புதிய காதி வஸ்திராலயத்தைத் திறந்துவைத்தார். பிரார்த்தனை, நூற்பு யக்ஞம், சொற்பொழிவு முதலியன நடைபெற்றன.

* * *

முன்பு கதர் மலரில் விடுத்த வேண்டுகோளின்படி, கீழ்க்கண்ட கதாயி மண்டல்கள் 83-வது சர்க்கா ஜயந்திக்குள் ஏராளமாக நூற்க சங்கற்பம் எடுத்துக் கொண்டுள்ளன. மண்டல்களின் பெயரும், நூற்கச் சங்கற்பித்துக்கொண்ட சிட்டங்களின் எண்ணிக்கையையும் கீழே குறிப்பிடுகிறோம்:

ஊர், மண்டல் பெயர்.	சிட்டம் எண்.
மண்ணங்காடு: காந்திராமன் கதாயி மண்டல்	– 303
அலிவலம்: கஸ்தூரிபா கதாயி மண்டல்	– 92
பல்லவபுரம்: ஜவஹர் கதாயி மண்டல்	– 415
மறவக்காடு: கஸ்தூரிபா கதாயி மண்டல்	– 577
வடகாடு: வினோபாஜி கதாயி மண்டல்	– 736
கோளப்பாடு: கதாயி மண்டல்	– 211
திருப்பழணம்: ஸ்ரீ ஈஸ்வர சந்திர வித்யாசாகர் கதாயி மண்டல்	– 165
அம்மையப்பன்: கதாயி மண்டல்	– 85
திருவாரூர்: காந்திஜி சாந்தி நிலய சர்க்கா கதாயி மண்டல்	– 283
மன்னார்குடி: மீனாக்ஷி கதாயி மண்டல்	– 226
மாயூரம்: கதாயி மண்டல்	– 83
அரசூர்: நேதாஜி கதாயி மண்டல்	– 412
ஆலத்தம்பாடி: எஸ். எஸ். பி. மண்டல்	– 584
கம்மவர்பாளையம்: பாபுஜி கதாயி மண்டல்	– 156
வேலாயுதபாளையம்: கதாயி மண்டல்	– 402
எழுமூர்: கார்த்திகேயன் கதாயி மண்டல்	– 100
சேலையூர்: கதாயி மண்டல்	– 83
மழவராயநல்லூர்: கதாயி மண்டல்	– 295
சிலம்பூர்: கதாயி மண்டல்	– 83
கதிராமங்கலம்: மஜூம்தார் கதாயி மண்டல்	– 479
கும்பகோணம்: ஸ்ரீ வாஸவி கதாயி மண்டல்	– 241
கும்பகோணம்: காந்தீய சோஷலிஸ கழக-கதாயி மண்டல்	– 243
மங்கநல்லூர்: பஜாஜ் கதாயி மண்டல்	– 83
கோண்டத்தூர்: வினோபாஜி கதாயி மண்டல்	– 95
தென்பரை: கனு காந்தி கதாயி மண்டல்	– 83
வாட்டார்: மகாத்மா காந்தி கதாயி மண்டல்	– 150
கீழகல்பூண்டி: ராஜாஜி கதாயி மண்டல்	– 83
திருவாரூர்: கஸ்தூரிபா கதாயி மண்டல்	– 1540
மஞ்சவயல்: குமரன் கதாயி மண்டல்	– 423
மேலையூர்: வினோபாஜி கதாயி மண்டல்	– 235
கோடவாசல்: காந்தீய நூற்பு (கதாயி) மண்டல்	– 125
களப்பால்: வினோபாஜி கதாயி மண்டல்	– 83
திருவையாறு: பாபூஜி கதாயி மண்டல்	– 190

127781
சென்னை-600 008.

அமெரிக்கா செல்லும் ஸ்ரீ க. அருணசலம்.

ஸ்ரீ து. சுப்ரமணியம்.

ஜூலை மாதம் 25-ம் தேதி, பெரிய நாயக்கன்பாளையம் காந்தி கதாயி மண்டலின் சார்பாக, இம் மண்டலின் தலைவரும், காந்தி ஆதாரப் பயிற்சிக் கலாசாலையின் தலைமை ஆசிரியரும், நிர்மாண ஊழியருமாகிய ஸ்ரீ க. அருணசலம் பி. ஏ., எல். டி., அவர்கள் அமெரிக்கா செல்வதை முன்னிட்டு ஓர் பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது.

ஸ்ரீ அருணசலம் அமெரிக்காவிலுள்ள அயோவா ஸ்டேட் யுனிவர்சிடிக்கு ஆசிரியர் கல்விப் பயிற்சியில் விசேஷப் படிப்புக்காகச் செல்கிறார். ஆகஸ்ட் 25உ பம்பாயிலிருந்து கப்பல் மூலமாகப் பயணமானர். அங்கு இரண்டு வருஷ காலம் தங்குவார். பிரயாணச் செலவையும், அங்கு தங்கியிருக்குங் காலத்திலாகும் பயிற்சி, சுற்றுப்பிரயாணச் செலவுகளனைத்தையும் "வாடுமல் நிதி" ஏற்றுக்கொள்ளும். அமெரிக்காவிலுள்ள பிரபலமான எல்லாக் கல்வி ஸ்தாபனங்களையும், புக்கர்-டி-வாஷிங்டனின் டஸ்கீஜி யுனிவர்சிடியையும் பார்ப்பார்.

இவரது எளிமைக்கு உதாரணமாக, ஆறேழு பேருக்கு மத்தியில், தாமே நூற்ற நூலில் மாங்கல்ய தாரணம் செய்து, தமது திருமணத்தைச் செலவின்றி முடித்துக் கொண்டது ஒன்றே போதும். இவரது வாழ்க்கைத் துணைவி ஸ்ரீமதி மனோன்மணி அம்மையாரோ, பள்ளி வேலைகள் எவ்வளவிருந்தாலும், வேலையாள் இல்லாமல், வீட்டு வேலைகளெல்லாவற்றையும் தாமே செய்து முடிப்பார்.

வர்தாவுக்குச் சென்று, ஆதாரக் கல்வி முறையில் பயிற்சி பெற்றுத் திரும்பினர். பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தில் கடந்த பதினைந்து வருஷங்களாகப் பணியாற்றி வரும் இவர், ஆசிரியப் பட்டதாரிகளின் பயிற்சிக்குத் தலைமை வகித்து, பல பேரை ஆதாரக்கல்வித் துறையில் பயிற்றியுள்ளார்; எண்ணற்றவர்களின் வாழ்க்கைப் பாதையை மாற்றி யமைத்துள்ளார். இவர் எந்த வேலையையும் இழிவு என்று கருதுவதில்லை, தாமே செய்வார். பல துறைகளிலும் அனுபவமும் திறமையும் மிக்கவர். கேட்போர் மனம் சலிப்புறுத வகையில் காந்தியக் கருத்துக்களைப் பொழிவதில் வல்லவர். காந்தியடிகளுடன் பன்னாள் இருந்திருக்கிறார். காரியத்தில் கண்ணும், வேலையில் கண்டிப்பும் உள்ளவர். இவர் அடிக்கடி கூறும் சிந்தனைக்குரிய சில வார்த்தைகள்: "செய், சிந்தனையுடன்". "இரக்கம் காட்டு; ஆனால் காரியத்தில் கண்டிப்பாயிரு."

இத்தகைய ஒருவர் மேற்படிப்புக்காக அமெரிக்காவுக்குச் செல்வது ஸர்வோதய ஊழியர்களின் ஒரு வாய்ப்பென்றே கருதலாம். பலர் அமெரிக்காவுக்குச் சென்று திரும்புவதுண்டு. இங்கு வந்ததும், அவர்கள், மேல்நாட்டு நாகரிகத்தின்மேல் மோகங்கொண்டு தாய் நாட்டையே மறந்து விடுவதுண்டு. ஆனால் ஸ்ரீ அருணசலம் காந்தியத்தின் பிரதிநிதியாகவே அங்கு செல்கிறார். கதர் ஆடையுடன், இராட்டை, தக்ளி, பலகைமணை, உருளை இவற்றுடன் செல்கின்றார்; அந்நாட்டிற்கு காந்தீயக் கருத்துக்களை எடுத்துச் செல்லும் தூதர் எனக் கூறலாம்.

காந்தீயக் கருத்துக்களைப் பரப்பி, இவர் நல்ல பெயரும் புகழும் பெற்று, தாம் மேற்கொண்டு செல்லும் கல்வியிலும் தேர்ச்சியுற்றுத் தாய்நாடு திரும்ப வேண்டுமாய் நாம் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

அக்டோபர் 2-உ.

அக்டோபர் 2-ம் தேதி நம் தேசத்தின் புனித தினம். ஸ்ரீ ராமநவமி கிருஷ்ண ஜயந்தியைப்போல, ஒரு அவதார புருஷர் பிறந்த நாள். நம் தேசத்தின் விடுதலை மூலம் உலக மக்களின் விடுதலைக்காக ஓர் மகா புருஷர் அவதரித்த நாள். தாம் பிறந்த நாளை மகாத்மா சர்க்கா ஜயந்தி என்று பெயரிட்டார். இதை வருஷா வருஷம் நாம் கொண்டாடுகிறோம். ஆனால் இந்த மகானின் உபதேசத்தை அறிந்து அதைப் பின்பற்றுகிறோமா என்பதைச் சிந்தித்து, நமது மனச்சாட்சியைச் சோதனை செய்துகொள்ள இது ஒரு புண்ணிய தினம்.

அவதார புருஷர்கள் முன்னர் அழித்த அரக்கர்களின் ரூபம் வேறு. ஆனால் காந்திஜி போராட வேண்டியிருந்த அரக்கன் வேறு. இந்த அரக்கனின் வெளிப்போர்வை ஏகாதிபத்தியமாக இருந்தது. உண்மையில் அதன் சொரூபம் யந்திரம். ஏகாதிபத்திய வெளிரூபத்தை மட்டுந்தான் காந்திஜி அழிக்க முடிந்தது. உண்மையான அரக்கனின் ரூபத்தை நமக்கு எப்பொழுதும் ஞாபகமூட்டி வந்தார்; அவ்வரக்கனுடன் போராட நமக்கு வழி காட்டினார். ஆனால் நாம் ஒன்றும் செய்ய முடியவில்லை. யந்திர அரக்கன் குஞ்சாக இருந்தபொழுது மனிதனுக்கு அடங்கி, அவனுக்கு அடிமையாகச் சேவை செய்தான். ஆனால் நாளடைவில், தன் கோர சொரூபத்தைக் காட்டத் தொடங்கி, மனித வர்க்கத்தையே இன்று அடிமைப்படுத்திவிட்டான்.

இந்த அரக்கன் யார்? கிராம மனிதனின் கைகளிலிருந்து வேலையைப் பிடுங்கி, அவர்களை நிர்க்கதியாக்கிவிட்டான்; நகர மனிதரின் பேராசையைத் தூண்டிவிட்டான்; கிராம மக்களின் மூலப்பொருளைப் பிடுங்கி, வேண்டாத பொருளை உற்பத்தி செய்து, ஆசை காட்டி, கிராமத்து மக்களின் தலையிலே சுமத்தினான்; அவர்களின் உற்பத்தி சக்தியைப் பிடுங்கிக்கொண்டு, தன்னுடைய அரசியல் செல்வாக்கை நிலைநாட்டினான். பணம் என்னும் பேயை கிராமங்களுக்கு அனுப்பி, செல்வத்தைச் சுரண்டினான். கிராம இரத்தத்தை அட்டை உறிஞ்சுவதுபோல் உறிஞ்சி வருகிறான். இந்த வாழ்க்கை முறைக்கு 'விஞ்ஞானம்' என்ற நாகரிகப் பெயரைக் கொடுத்தான். இதற்காக கல்வித் திட்டம், வியாபார முறை, நிர்வாக சாமர்த்தியம், கலை முதலிய எல்லாவற்றையும் ஏற்படுத்திக்கொண்டான். நகர வாழ்க்கையில், பணத்திலே, சுரண்டல் கல்வியிலே, அதிகாரத்திலே, வியாபாரத்திலே நிறைந்து, மாயாரூபத்தில் இன்று நம் தேசத்தின் கிராமத்தில் உள்ள 85 சதவிகித மக்களைச் சுரண்டி வருகிறான்.

யந்திர நாகரிகத்துடன் போராட மகாத்மா தந்த ஆயுதம் ராட்டையே. நாம் அதே ராட்டையைக்கொண்டு யந்திர அரக்கனிடமிருந்து விடுபட்டுப் புதிய சமுதாயத்தை ஏற்படுத்த உறுதி கொள்வோமாக. இந்த யந்திர ஏகாதிபத்திய அரக்கனிடமிருந்து, நம்மை ஆண்டுவந்த வெள்ளையரை ராட்டைமூலம் காந்திஜி காப்பாற்றினார். பாவம்! கிராமத்தைச் சுரண்டும் யந்திர-நாகரிக-நகர வாழ்க்கை மோகத்தில் சிக்கிக்கொண்டு தவிக்கும் நம் சகோதரர்களை நாம் ராட்டைமூலமே மீட்க வேண்டும். யந்திரத்திற்கு நாம் அடிமையாகாமல், யந்திரத்தை நமக்கு அடிமையாக்க முயலுவோமாக.

இந்தப் புனித தினத்தில், காந்திஜியின் உபதேசத்தையும் வழியையும் நன்கு ஆராய்ந்து அதன்படி நடக்க நமக்கு ஆண்டவன் அருள்புரியப் பிரார்த்திப்போமாக.

"கதர் மலர்" — நான்காம் வருஷத்திய அட்டவணை

(அக்டோபர், 1950 முதல் செப்டம்பர், 1951 முடிய)

முக்கிய கட்டுரைகள்.

விஷயம்.		மாதம்.	வருஷம்.	பக்கம்.
மகாத்மா காந்தி				
கடிதங்கள்	....	அக்டோ.	'50	3
நான் கவலைப்படமாட்டேன்!	....	,,	,,	13
அஹிம்சை ஆகாச வஸ்துவல்ல	....	,,	,,	30
வெள்ளத்தின் படிப்பினை	....	நவம்.	,,	41
நம் குழந்தைகளின் கல்வி	....	,,	,,	43
அனுபவமே என் சொத்து	....	,,	,,	76
கடிதங்கள்	....	மார்ச்	'51	169
சர்க்காவின் சக்தி	....	மே	,,	267
செல்வம் பொன்னும் வெள்ளியுமல்ல	....	ஜூன்	,,	(அட் - 2)
கதரும் அஹிம்சையும்	....	,,	,,	277
ராம நாமம்	....	,,	,,	278
கடிதங்கள்	....	ஆகஸ்ட்.	,,	356
அஹிம்சையின் சின்னம் ராட்டை	...	செப்டம்.	,,	(அட்—4)
ஆச்சாரிய விநோபாஜி.				
கீதைப் பேருரைகள்	....	அக்டோ.	'50	14
ஊழியருக்கு பதில்	....	நவம்.	,,	(அட் - 2)
பணம் படுத்தும் பாடு	....	,,	,,	45
நூல் வேள்வி, நமது காமதேனு	....	டிசம்.	,,	(அட் - 2)
கிராம ராஜ்யத்திற்கு முன்னேற்பாடு	....	,,	,,	81
கூடிச் செயல் புரிதல்	....	,,	,,	93
கீதைப் பேருரைகள்	....	,,	,,	98
சாந்தி சேனை	....	,,	,,	103
ஸர்வோதய திருஷ்டி	....	,,	,,	107
,, மேளா	....	,,	,,	(அட் - 3)
ஆதாரக் கல்வி	....	,,	,,	(,, - 4)
உழைப்பு மய வாழ்க்கை	....	மார்ச்	'51	173
ஸர்வோதயக் குறிப்புகள்	....	,,	,,	175
நூல் காணிக்கை	....	,,	,,	177
ஸர்வோதய பிராயச்சித்தம்	....	,,	,,	179
வாக்கின் மகிமை	....	,,	,,	180
ராட்டை தரும் செய்தி	....	,,	,,	184
ஸர்வோதய தினம்	....	,,	,,	199
ஊழியர்களுக்கு அழைப்பு	....	ஏப்ரல்	,,	209
எந்த பாஷையில்?	....	,,	,,	214
உழைப்புத் தேவதை	....	,,	,,	222
திட சித்தத்தின் மூர்த்தி	....	,,	,,	231
கிராமப் பஞ்சாயத்து	...	,,	,,	(அட் - 4)
விவசாயத்தில் மனித சக்தி	....	மே	,,	249
ஸர்வோதய நோக்கு	....	,,	,,	252

கண்காட்சித் திறப்பு விழா	மே	'51	259
சேவைத் திரிவேணி	,,	,,	266
ஸர்வோதய யாத்திரை	ஜூன்	,,	279
ஊழியர்களிடையே	,,	,,	283
கீதைப் பேருரைகள்	,,	,,	293
புதிய யுகம்	ஜூலை	,,	309
கதருக்கு 3 ஆபத்துக்கள்	,,	,,	313
பொருளாதார சமத்துவம்	,,	,,	317
ஐந்து அம்ச வேலைத்திட்டம்	,,	,,	322
ஊழியர்களிடையே	,,	,,	328
பொருளுக்குத் தகுந்த மதிப்பு	,,	,,	337
பூமிதான யக்ஞம்	ஆகஸ்ட்	,,	345
ஜன சேவையே தீர்த்த யாத்திரை	,,	,,	350
கிராமம் கோகுலமாகட்டும்	,,	,,	351
கீதைப் பேருரைகள்	,,	,,	360
ஊழியர்களிடையே	,,	,,	366
கம்யூனிஸ்டுகள் விரும்புவதையே நான் செய்கிறேன்	செப்டம்.	,,	381
கல்வி உலகில் புத்துணர்ச்சி	,,	,,	384
ராமநாமம் ...	,,	,,	394
ஊழியர்களிடையே ...	,,	,,	397
கீதைப் பேருரைகள்	,,	,,	402

ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜூஜி.

கிராமக் கைத்தொழில்கள்	அக்டோ.	'50	8
சர்க்கா சங்கத் தொண்டர்கள்	டிசம்.	,,	95
மதுரைப் பொதுக்கூட்டத்தில்	ஜன–பிப்.	'51	139
கதாயி மண்டல்	மார்ச்	,,	(அட் – 3, 4)
கல்லுப்பட்டியில் கிராம முன்னேற்றம்	ஏப்ரல்	,,	243
தறிகாரரின் கஷ்டதசை	மே	,,	267

ஸ்ரீ மஷ்ருவாலா.

சர்க்காவும் விவசாயமும்	டிசம்.	'50	90
சர்க்காரும் கதரும்	ஜன–பிப்.	'51	162
சென்னை சர்க்கார்	ஏப்ரல்	,,	234
சுத்த விவகார இயக்கம்	மே	,,	261
ஐந்துவித ஸர்வோதய வேலைத்திட்டம்	ஜூன்	,,	281
பொதுஜன ஊழியரின் லட்சணம்	ஆகஸ்ட்	,,	359
நிர்மாண ஊழியரும் ஸ்தாபனங்களும்	,,	,,	369

ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி.

வஸ்திர யக்ஞம்	அக்டோ.	'50	11
,, ...	,,	,,	23
மூங்கில் ராட்டை	நவம்.	,,	53
உபகரணச் சோதனை	,,	,,	56
சென்னை சர்க்காரின் திட்டம்	,,	,,	68
மீண்டும் சென்னை சர்க்கார்	மார்ச்	'51	185

திருப்பூரில் (பேச்சு) .... ஏப்ரல் '51 242
ஸ்தாபனமில்லாத நிர்மாண வேலை .... ஜூலை ,, 329

ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார்

சுதந்திர ரயில் வண்டி .... ஜன-பிப். ,, 141
ஜனவரி 30உ .... ,, ,, (அட் - 3, 4)
தகுந்த சமயம் .... மார்ச் ,, (,, - 2)
வாலிபர்களுக்கு அழைப்பு .... ,, ,, 193
புரட்சி சுலபமல்ல .... ஏப்ரல் ,, 220
அஹிம்சா புரட்சி .... ,, ,, 225
நூல் விதி ஏன்? .... ,, ,, 235
ஒத்துழையாமையும் பகிஷ்காரமும் .... மே ,, 250
ஆதாரக் கல்வி மூலம் புரட்சி .... ஜூன் ,, 286
தேசிய பொருளாதாரத் திட்டம் .... ,, ,, 297
,, ,, ... ஜூலை ,, 333
,, ,, ... ஆகஸ்ட் ,, 363
கேள்வியும் பதிலும் .... ஜூலை ,, 325
இன்றைய பிரச்னைகள் .... ஆகஸ்ட் ,, 348
வாலிபர்களுக்கு அழைப்பு .... செப்டம். ,, 399

ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத்.

நான் கண்ட காந்தி .... அக்டோ. '50 17
காந்தி ஞான மந்திரம் .... மே '51 273

ஸ்ரீ ஜே. ஸி. குமரப்பா

ஜனநாயகத்தின் அடிப்படை .... செப்டம். ,, 389

ஸ்ரீ காகா கலேல்கர்

அபூர்வக் காட்சி .... நவம். '50 79
களவின்மையும் கபடமின்மையும் .... ஆகஸ்ட் '51 355
உடல் உழைப்பு .... செப்டம். ,, 396

ஸ்ரீ சுசீலா நையார்.

மஹாதேவ் பாயின் இறுதி நாட்கள் .... நவம். '50 48
,, ... டிசம். ,, 86
,, ... மார்ச் '51 181
,, ... ஏப்ரல் ,, 217
,, ... ஆகஸ்ட் ,, 353

ஸ்ரீ தாதாபாய் நாயிக்.

பருத்தியும் கருவிகளும் .... ஜன-பிப். ,, 132
பருத்திப் பிரச்னை .... ஏப்ரல் ,, 230

ஸ்ரீ கனு காந்தி.

பயிற்சி முகாம்கள் .... நவம். '50 61

ஸ்ரீ சோவ்னி.

யந்திர ஓட்டிக்கு ராட்டை .... மே '51 258

ஸ்ரீ அம்ருத ராவ் காட்கே.

தேனீக்களின் மகத்துவம் .... மார்ச் ,, 178

ஸ்ரீ கோபால் ராவ் காளே

வினோபாஜியைப் பற்றிய நினைவுகள்	மே	'51	264

ஸ்ரீ ஜகந்நாத தாஸ்.

காப்பாளர் தக்கர் பாபா	ஜூன்	,,	304

ஸ்ரீ விஷ்ணு பிரஸாத் ர. வியாஸ்.

பஞ்சு வெட்டுதல்	ஜன-பிப்.	,,	130

ஸ்ரீ தில்குஷ் தீவான்ஜி

வரிகொடா வீரர்	ஜூன்	,,	291

லார்ட் சாமுவேல்.

காந்திஜியின் பெருமை	,,	,,	300

ஸ்ரீ நா. ராமகிருஷ்ணன்.

குஷ்ட நிவாரண சேவை	அக்டோ.	'50	31
,, ...	டிசம்.	,,	101

ஸ்ரீ ஆ. பெரியதம்பி மழவராயர்.

காந்தி எனது தெய்வம்	ஜூலை	'51	331

ஸ்ரீ என். எஸ். ஸ்வாமிநாதன்

வினோபாஜி யாத்திரை ...	செப்டம்.	,,	404

ஸ்ரீ து. சுப்பிரமணியம்

அமெரிக்கா செல்லும் ஸ்ரீ அருணாசலம்	,,	,,	412

நான்காவது அகில இந்திய கதர் உபகரண மகாநாடு, மதுரை.

அறிவிப்பு	அக்டோ.	'50	30
விளக்கம்	ஜன-பிப்.	'51	113
நடவடிக்கை	,,	,,	116
வரவேற்புப் பிரசங்கம்	,,	,,	119
வரவேற்பு உரை	,,	,,	121
காரியதரிசியின் உரை	,,	,,	123
கருவி ஆராய்ச்சிக் கமிட்டி வேலை அறிக்கை	,,	,,	128
உபகரணக் கண்காட்சி	,,	,,	136, 145
தீர்மானங்கள்	,,	,,	147
வரவேற்புக் கமிட்டியார்	,,	,,	150

ஆசிரியரின் குறிப்புகளும், இதர விஷயங்களும்.

அ. இ. குடிசைத் தொழிற் சங்கம்	நவம்.	'50	66
அக்டோபர் 2-வ ...	செப்டம்.	'51	413
அன்னை பீடர்சன்	மார்ச்	,,	204
அஸ்ஸாம் பூகம்பம்	அக்டோ.	'50	27
ஆதாரக் கல்வி போர்டு	மார்ச்	'51	207
இலங்கை காந்திய சேவா சங்கம்	நவம்.	'50	67
,, ,, ,, ...	ஜூலை	'51	343
இன்னுமா ஆலைகள்?	ஜூன்	,,	306

இன்னுமா சந்தேகம்?	....	ஜூலை	'51	338
அகில இந்தியாவில் கதர் வேலை	....	மே	,,	(அட்—4)
ஈரிழை துபட்டா ரகம்	....	,,	,,	(,, —3)
உபகரண மகாநாடு, மதுரை	....	அக்டோ.	'50	30
,, ,,	....	நவம்.	,,	(அட்—4)
,, ,,	....	எப்ரல்	'51	241
கதரன்பர்கள் மகாநாடு	....	ஜன–பிப்.	,,	163
,, ,,	....	எப்ரல்	,,	241
"கதர் மலரி"ன் நான்காவது ஆண்டு	....	அக்டோ.	'50	1
கதாயி கார்யகர்த்தா பரீட்சை	....	மார்ச்	'51	207
கதாயி மண்டல்	....	ஜூலை	,,	(அட்—3)
,, சென்னை	....	ஜன–பிப்.	,,	164
,, ,,	....	மே	,,	(அட்—3)
,, மகாநாடு, இடுவாய்		மார்ச்	,,	206
கதாயி மண்டல்கள் ('50-'51)	....	நவம்.	'50	77
"கதாயி மண்டல் பத்ரிகா"	....	மார்ச்	'51	208
,, ,,	....	ஜூலை	,,	343
,, ஷிபிர்	....	நவம்.	'50	63
,, புதிய விதிகள்	....	எப்ரல்	'51	237
கலைப் பரீட்சையில் தேறினோர்	....	ஆகஸ்ட்	,,	376
காங்கிரஸில் கதர் தீர்மானம்	....	நவம்.	'50	80
காதி சமிதி, ஹைதராபாத்	....	ஜூன்	'51	308
"காதி ஜகத்" (மலையாளம்)	....	மார்ச்	,,	207
"கதர் உலகம்" (Khadi World)	....	,,	,,	,,
சங்கத்தின் டிரஸ்டிகள்	....	நவம்.	'50	67
,, விபாகங்கள்	....	எப்ரல்	'51	239
சங்கத் தொண்டர்கள் பயிற்சி	....	டிசம்.	'50	110
,, ,,	....	ஜூன்	'51	301
82-வது சர்க்கா ஜயந்தி	....	அக்டோ.	'50	(அட்—2)
,,	....	நவம்.	,,	64
,,	....	,,	,,	(அட்—3)
சுயதேவை உற்பத்தி	....	எப்ரல்	'51	(,, —4)
தமிழ்நாட்டு விபாகங்கள்	....	ஜன–பிப்.	,,	161
,, ,,	....	மார்ச்	,,	208
கோவை விபாக்	....	செப்டம்.	,,	410
சென்னை விபாக்	....	எப்ரல்	,,	240
,,	...	செப்டம்.	,,	409
தஞ்சை விபாக்	....	ஆகஸ்ட்	,,	375
,,	....	செப்டம்.	,,	411
திருநெல்வேலி விபாக்	...	,,	,,	408
மதுரை விபாக்	....	ஆகஸ்ட்	,,	375
நூற்புச் சம்பளம்	....	ஜன–பிப்.	,,	164
,, ,,	....	எப்ரல்	,,	239
நூற்பு நெசவுப் போட்டி	....	மார்ச்	,,	206
நூற்புப் போட்டியில் பரிசு பெற்றோர்	....	மே	,,	276
நூற்புக் கருவி ஆராய்ச்சி	....	ஜூன்	,,	302

நெசவுப் பயிற்சி	ஆகஸ்ட்	'51	379
மரப் பருத்தி	ஜூலை	,,	(அட்—4)
மூலனூரில் தீவிர சுயதேவைத் திட்டம்	ஜன-பிப்.	,,	159
,, சுயதேவைப் பூர்த்தி	ஆகஸ்ட்	,,	377
ராட்டைத் தொழிற்சாலைகள்	,,	,,	149
83 சிட்டம் நூற்க சங்கற்பம்	,,	,,	372
ஸ்ரீ கனு காந்தி (சென்னையில்)	ஜன-பிப்.	,,	164
,, கனு காந்தியின் ஷிபிர்கள்	டிசம்.	'50	110
,, ,, ,, ,, ...	ஜன-பிப்.	'51	163
கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதி	நவம்.	'50	66
,, ,, ...	மே	'51	272
,, ,, முருளியில்	ஆகஸ்ட்	,,	376
காந்தி ஞாபகார்த்த நிதி	நவம்.	'50	67
,, ...	மார்ச்	'51	(அட்—4)
,, ...	மே	,,	275
,, ...	ஜூன்	,,	301
,, ...	ஆகஸ்ட்	,,	368
காந்தி கிராமம்	நவம்.	'50	67
,, ...	ஜூன்	'51	308
காந்தி நிகேதனம், கல்லுப்பட்டி	மே	,,	(அட்—3)
ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜூஜி	டிசம்.	'50	111
ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி	,,	,,	110
,, ,, ...	ஜன-பிப்.	'51	163
,, ,, ...	மார்ச்	,,	206
,, ,, ...	ஏப்ரல்	,,	242
ஹிந்தி மாணவர் விழா	நவம்.	'50	67
ஸ்ரீ குமரப்பாவின் பண்ணை ஆசிரமம்	ஜூலை	'51	(அட்—3)
குஷ்ட நிவாரண மகாநாடு	நவம்.	'50	67
,, கேந்திரம், திருக்கோவிலூர்	ஏப்ரல்	'51	240
கோவை சேவா நிலையம்	டிசம்.	'50	111
ஸர்வ சேவா சங்கம்	அக்டோ.	,,	27
,, ...	நவம்.	,,	66
,, ...	மே	'51	254
,, ...	ஜூலை	,,	343
ஸர்வோதய சம்மேளனம்	மார்ச்	,,	205
,, ,, சிவராம்பள்ளி	ஏப்ரல்	,,	(அட்—2)
,, ,, ,, ...	மே	,,	245
,, ,, ,, ...	,,	,,	260
,, தினம்	மார்ச்	,,	200
,, மேளா	ஜன-பிப்.	,,	(அட்—4)
,, ,, ...	மார்ச்	,,	195
,, நூற்பு யக்ஞம்	,,	,,	201
,, நூல் காணிக்கை	மே	,,	276
ஸர்வோதய பிரசுராலயம்	ஏப்ரல்	,,	236

ஸர்வோதயமும் நேருஜியும்	....	ஜூன்	'51	303
சங்க ஊழியர் கூட்டம்	....	மே	,,	256
சம்மேளனத்தில் உணவுப் பிரச்னை	....	ஜூலை	,,	344
சம்பூர்ண துப்புரவு	....	,,	,,	(அட்—4)
சர்தார் பட்டேல்	....	ஜன-பிப்.	,,	(,, —2)
சிதம்பரத்தில் நிர்மாண வேலை	....	மார்ச்	,,	204
சிப்பிப்பாறை ஊழியர் பயிற்சி	....	ஜூலை	,,	340
ஸ்ரீ ஜி. சுப்ரமண்யம்	....	ஜன-பிப்.	,,	163
தக்க சமயம்	....	ஜூன்	,,	307
தக்கர் பாபா	....	,,	,,	304
ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார்	....	டிசம்.	'50	111
,, ,,	....	ஜன-பிப்.	'51	164
,, ,,	....	மார்ச்	,,	206
,, ,,	....	மே	,,	268
,, ,,	....	ஜூன்	,,	308
நூல் விதி ஏன்?	....	டிசம்.	'50	105
பரதன் — ராமன் சந்திப்பு	....	ஜூலை	'51	327
புதிய மந்திரம்	....	மே	,,	(அட்—2)
பூமிதான யக்ஞம்	....	ஆகஸ்ட்	,,	379
பெண்கள் பயிற்சி முகாம்	....	ஏப்ரல்	,,	241
வருந்துகிறோம்	....	ஜூலை	,,	(அட்—3)
வியாபாரிகளுக்கு லைசென்ஸா?	....	,,	,,	373
விவசாயிகள் மகாநாடு	....	டிசம்.	'50	111
விற்பனை ஏஜன்சி	....	ஏப்ரல்	'51	241
ஸ்ரீ விநோபாஜி	....	ஜூலை	,,	(அட்—2)
,, விநோபாஜியின் யாத்திரை	....	ஏப்ரல்	,,	(,, —3)
,, ,, ,,	....	ஆகஸ்ட்	,,	378

இலக்கியம்

கதர் சேவையும் தத்துவமும்	....	அக்டோ.	'50	26
கதாயி மண்டல்	....	ஜூன்	'51	(அட்—4)
காந்திய இலக்கியம்	....	ஜூலை	,,	339
கதர் உலகம் (Khadi World)	....	ஆகஸ்ட்	,,	380
குருஜி கா சிட்டா	....	ஜூன்	,,	(அட்—4)
சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	....	அக்டோ	'50	26
பட்டைபோட சுலப வழி	....	,,	,,	27
பூர்ண ஸ்வதேசி	....	ஜூன்	'51	(அட்—4)
மஜூம்தாரின் புத்தகங்கள்	....	ஏப்ரல்	,,	(,, —4)
ராமநாமம்	....	ஜூன்	,,	(,, —3)
The Ideology of the Charkha	....	,,	,,	(,, —3)
சர்க்கா ஜயந்தி வேலைத் திட்டம்	....	செப்டம்.	,,	(,, —3)
4-வது ஆண்டு பூர்த்தி	....	,,	,,	(,, —2)

12778

* * *

Edited and Published by N. Ramaswami for All India Spinners' Association (Tamil Nad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

சர்க்கா ஜயந்தி வேலைத் திட்டம்.

சென்ற வருஷம் 82 தினங்களுக்கு பிரதிதினமும் ஒரு மணி நேர நூற்பு யக்ஞம் நடத்தினோம். இதற்கு மூன்று நோக்கங்கள் இருந்தன:

1. நூற்புப் பயிற்சி, 2. வேகமாக நூற்கப் பயிற்சி, 3. முறைப்படி நூற்பது.

இதன்மூலம் புதிதாக நூற்பவருங்கூட பயிற்சி பெற்று ஜயந்திக் காலத்தில் குறைந்தது 20 சிட்டமாவது நூற்கக்கூடும் என்ற நம்பிக்கை யிருந்தது. பிரதிதினம் தவறாமல் நூற்றால், வருஷம் பூராவும் 80-100 சிட்டங்கள் நூற்பது சுலபம். இந்த நோக்குடன் இவ்வருஷம் குறைந்தது 83 சிட்டம் நூற்கச் சங்கற்பம் செய்துள்ளோம். இதை நிறைவேற்றுவது கடினமல்ல. ஜூலை 12-வ முதல் நாம் தொடர்ந்து ஒரு மணி நேரம் நூற்றால், 28 முதல் 42 சிட்டம் வரையில் நூற்க முடியும். ஆகையால், ஜயந்திக் காலத்தில் கீழ்க்கண்ட வேலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது:

(1) ஒவ்வொரு கதாயி மண்டல் அங்கத்தினரும், வருஷம் பூராவும், அதாவது 82-வது ஜயந்தியிலிருந்து 83-வது ஜயந்தி வரை, குறைந்தது 83 சிட்டம் நூற்பதாகச் சங்கற்பம் செய்துகொள்ளவேண்டும்.

(2) வரும் ஜயந்தியில் குறைந்தது 100 இடங்களில் நெசவு யக்ஞம் அல்லது நெசவில் பயிற்சி கொடுக்கும் திட்டம் நடைபெறவேண்டும்.

இந்தத் திட்டங்களினால் கதாயி மண்டல்களிடம் நேரான தொடர்பு ஏற்படும். நெசவு தெரிந்தவர் மட்டுந்தான் நெசவுப் பயிற்சி கொடுக்கத் தகுதியாவார். நெசவுப் பயிற்சி பெற்ற சங்கத்தின் தொண்டர்களை ஜயந்திக் காலத்தில் பூரணமாக மற்ற வேலைகளிலிருந்து விடுவித்து, நெசவுப் பயிற்சி கொடுக்கும் வேலையில் அவர்கள் ஈடுபடும்படி செய்யப்படுவார்கள். கதாயி மண்டல்கள் நெசவுப் பயிற்சி நடத்த விரும்பினால், அங்கு தொண்டரை அனுப்பி ஒன்றிரண்டு பீஸ் நெய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

இம்மாதிரித் தொண்டர்கள், சர்க்கா சங்கத்தின் தொண்டராகவும், இதர தொண்டராகவும் இருக்கலாம், பயிற்சி கொடுக்கும் தொண்டரின் போஜனச் செலவைப் பயிற்சி பெறுபவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். தறிக்கும் மண்டலே ஏற்பாடு செய்யவேண்டும்.

பயிற்சி பெற விரும்பும் கதாயி மண்டல் அங்கத்தினர்கள், நெசவுத் தொண்டருக்கு உதவி செய்துகொண்டே நெசவுக் கலையைக் கற்பதுடன், தங்கள் நூலில் உள்ள குறைகளையும் அறிந்து, அவற்றைத் திருத்திக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். மற்ற விவரங்களுக்கு 'சஞ்சாலக், கதாயி மண்டல் விபாக், சர்க்கா சங்கம், சேவாகிராமம்' என்ற விலாசத்திற்கு எழுதக் கோரப்படுகிறது.

முகாம், திருப்பூர்.
7—7—'51.

கிருஷ்ணதாஸ் காந்தி.
காரியதரிசி, அகில பாரத சர்க்கா சங்கம்.

ராட்டை அஹிம்சையின் சின்னம்.

மகாத்மா காந்தி.

501.
8 - SEP 1951
MADRAS

(ஸ்ரீ நாராயணதாஸ் காந்திக்கு எழுதிய கடிதம்.)

உனது விருத்தாந்திர வேண்டுகோளை கவனமாகப் படித்தேன். நான் இன்னும் எதுவும் எழுத ஆரம்பிக்கவில்லை. நோயாளிகளுக்கு மட்டும் 3 கடிதங்கள் எழுதினேன். தரித்திர நாராயணனைப் போன்ற நோயாளி உலகத்தில் வேறெவருமில்லை. நீயோ அவருடைய பரம பக்தர்களுள் ஒருவன். என் ஜயந்தியின் நிமித்தமாக சர்க்கா ஜயந்தியை நடத்தி பிரதி வருஷமும் அவருக்கு சேவை செய்துகொண்டே வருகிறாய். இவ்வருஷத்தில் திட்டம் ஏறியிருக்கிறது. உனக்கு அதில் வெற்றி கிட்டுவதாக. மாளிகையில் இருந்த சமயம் மார்க்ஸைப் பற்றியும் ரஷ்யாவின் பெரிய சோதனைகளைப் பற்றியும் நூல்கள் கிடைக்க, அவற்றைப் படித்தேன். அந்தச் சோதனைகள் எங்கே, இந்த ராட்டை எங்கே? அங்கும் பொது மக்களை நம்மைப் போலவே வேள்விக்கு அழைக்கிறார்கள். ஆனால் இதற்கும் அதற்கும், கிழக்குக்கும் மேற்குக்கும் அல்லது வடக்குக்கும் தெற்குக்கும் உள்ள வேற்றுமையுண்டு. நமது ராட்டையெங்கே, நீராவியாலும் மின்சாரத்தினாலும் ஓடும் யந்திரங்களெங்கே? ஆயினும், ஆமை நடையில் போகும் ராட்டையே எனக்குப் பிடித்திருக்கிறது. ராட்டை அஹிம்சையின் சின்னம். இறுதியில் வெற்றி அஹிம்சையினுடையதே. ஆனால் அதை வழிபடும் நாம் அறிவிலிகளாயிருந்தால் நமக்கும் கெட்ட பெயர், அஹிம்சைக்கும் அவமானம். நீ செய்யும் காரியம் நன்றாயிருக்கிறது. இப்பொழுது அதில் புதுமையைப் புகுத்த வேண்டும். யந்திரத்திற்கு இருப்பது போல் ராட்டைக்கும் ஒரு சாஸ்திரம் உண்டு. ராட்டையின் யந்திர நுணுக்கங்களை நாம் இன்னும் கற்றுக் கொண்டாகவில்லை. அதற்கு ஆழ்ந்த பயிற்சி தேவை. நம்பிக்கையில்லாத ஞானம் வீணாவதைப் போல, ஞானமில்லாத நம்பிக்கை குருட்டு நம்பிக்கையே.

ஆகாகான் மாளிகை,
20—5—'44.

மோ. க. காந்தி.

நம்பிக்கை உறுதி பெறவேண்டும்.

ராட்டை, அரசியல் பொருளாதார சமூக சுதந்திரத்திற்கு உதவும் தலைசிறந்த கருவி யாகும். ஆனால் கோடிக்கணக்கானவர்கள் அதை இன்னும் ஏற்றுக்கொண்டாகவில்லை யென்பது வெட்ட வெளிச்சமான விஷயம். நாடு அதை அஹிம்சையின் சின்னமாக ஏற்றிருக்குமானால் இன்றைய விபரீத நிலைமை தோன்றியே யிராது. இந்தச் சூழ்நிலையில் கதர் அன்பர் செய்யவேண்டியது என்ன? சூழ்நிலை தமக்கு மிகவும் எதிராக இருக்கும்பொழுது, நம்பிக்கை உள்ளவர்களின் நம்பிக்கை மேலும் உறுதி பெற்று விளங்க வேண்டும் என்பது தர்மத்தின் போதனை. இதற்கு எடுத்துக்காட்டாக எத்தனை பேர் இருப்பார்கள்? என்னுடைய நூற்பு பிரதிதினமும் நடந்து வருகிறது. அரை மணி என்ற திட்டம் வழுவுவதில்லை.

12—6—'47.

மோ. க. காந்தி.

கமலா பிரஸ், திருப்பூர்.